


பரிமாணம்
e-Paper
Parimanam
பரிமாணம்
கல்முனை NET
kalmunainet.com
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 18 | சுபகிருது வருடம் தை 17 | 2023 ஜனவரி 31 செவ்வாய்க்கிழமை | 20 பக்கங்கள் | விலை 70/-




04

## தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டும் தீர்வு அல்ல



03

## யாழ். மாநகர மேயர் வேட்பாளர் வித்யாதரன் போட்டியிலிருந்து விலகல்...?



10

## ஜெஸிந்தா

உலக அரசியலின் நாகரீக கனவான்



## பல்துறைகளில் கால்பதித்த துடிப்பான றுத்ரா

12



## தமிழர்கள் மீது அரசு மறைமுக யுத்தம்; நேரடி போரை விடவும் ஆபத்து

03






08

## சிரட்டைக்குள் பிறந்த வாழ்வாதாரம்



# ஆணைக்குழுக்களை குழப்பியடிப்பதில் அரசுக்கு ஆதாயம் என்ன?

## பாராளுமன்ற அதிகாரத்தை பறிக்கத் துடிக்கும் நிறைவேற்று அதிகாரம்

✍ க. குணராசா

ஆணைக்குழுக்கள் விவகாரத்தில் அரசாங்கத்தின் உயர் மட்டம் நடந்து கொள்ளும்விதங்கள், அரசியலமைப்பை மீறுவதாக அமைகிறதா? என்ற கேள்வி இன்று பலராலும் எழுப்பப்பட்டு வருகிறது. நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப் படுத்துவதற்காக அரசியலமைப்பு ரீதியாக கொண்டு வரப்பட்ட ஆணை குழுக்களை குழப்பி அடிப்பது பாராளுமன்ற ஜனநாயகத்தை பறிக்கும் செயலாக இருக்குமா? என்ற ஐயப்பாடும் அரசியல் விமர்சகர்களின் பேசு பொருளாக இருக்கிறது.

அரசியல் பக்கச்சார்பான முடிவுகள் ஜனநாயகத்தையும் மக்கள் ஆணையையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்ததாலேயே சுதந்திர ஆணைக் குழுக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. நாட்டின் நிர்வாகம் எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமாக இயங்குவதை உறுதிப்படுத்துவதனால், ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகள் இல்லாமல் இவ்வாணைக் குழுக்கள் சுதந்திரமாக இயங்குவது அவசியம்.

மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்படும் இத்தகைய உச்சக்கட்ட ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவே, இலங்கையிலும் இந்த ஆணைக்குழுக்கள் அவசியப்பட்டன. ஆட்சிகள் மாறினாலும், அரசுகள் மாறுபட்டாலும் இந்த ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் மாறுபடலாகாது. இவ்வாறான நோக்கில்தான், அரசியலமைப்புத் திருத்தப்பட்டு ஆணைக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன.

நிறைவேற்று அதிகாரம் அறிமுகமான பின்னர்தான், இவ்வாறான சுதந்திர ஆணைக்குழுக்களின் அவசியம் உணரப்பட்டது. நீதித்துறை, நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறைகள் ஒன்றுடன் ஒன்று மோதி, அரச இயந்திரம் சீரழிவதைத் தடுக்கும் பணிகளுக்கு இந்த ஆணைக்குழுக்கள் அவசியப்படுகிறது.

ஆனால், நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அதிகார மட்ட இழுபறிகளால் மக்கள் மாத்திரமன்றி, அரச இயந்திரமும் குழம்பிப்போயுள்ளது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் உறுதி செய்துள்ள ஒன்பது ஆணைக்குழுக்களும் இன்று நிறைவேற்று அதிகாரத்துக்கு முன்னாலும், அரசியலமைப்பு பேரவையாலும் கையாலாகாத நிலைக்குச் சென்றுள்ளன.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவர் இராஜினாமாச் செய்துள்ளமை மற்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர், அதன் தலைவருக்கு "வீற்றோ" அதிகாரம் இல்லை எனப் பகிரங்கமாகக் கூறியுள்ளதெல்லாம், அதிகாரக் கெடுபிடிகளால் ஏற்பட்ட சிக்கல்களாகவே பார்க்க முடிகின்றது. இவ்வாறான கெடுபிடிகள் அரச உயர் மட்டத்திலிருந்து ஏன் வழங்கப்படுகின்றன? இதனால், இம்மட்டம் எதிர்பார்க்கும் இலாபங்கள் என்ன? இதுதான் இன்றுள்ள கேள்விகள். மக்கள் ஆணைக்கு (தேர்தல்) முன்னால் செல்ல அஞ்சும் அரச உயர் மட்டம், வரித்திருங்களை விரும்பும் அரசாங்கம், ஏற்கனவே மக்களால் வழங்கப்பட்ட ஆணைக்கு குறுக்காக நிற்கிறது.

வெளிநாடுகளின்பார்வையில், இதுசர்வாதிகாரமாகவும் நோக்கப்படலாம். பெயரளவில் ஆணைக்குழுக்கள், அரசியலமைப்புச் சபைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ள இந்தத் திருத்தங்கள், நிறைவேற்று அதிகாரத்தின் பிடியிலிருந்து விடுபட்டதாக இல்லை என்பதையே இன்றைய நிலைமைகள் தெளிவுபடுத்துகின்றன. தேவையான நேரத்தில் தேர்தலுக்குச் செல்வதும் நிர்க்கதியான நேரங்களில் வரித்திணிப்புச் செய்வதும் உண்மையான ஜனநாயகம் ஆகாது. இது அடிப்படை மனித உரிமை மீறலாக கூட பார்க்க முடியும்.

உண்மையில், இந்த ஆணை குழுக்களையும் உருவாக்குவதில் மிகவும் துடிப்போடு செயல்பட்டவர் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சி காலத்தில் அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை உருவாக்கி, சுதந்திர ஆணை குழுக்களுக்கு வித்திட்டவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

நாட்டின் பிரதமராக இருந்த போது ரணில் விக்ரமசிங்க ஆணை குழுக்களின் செயல்பாட்டை துரிதப்படுத்தியவர் என்ற நற்பெயர் இவருக்கு இருக்கிறது. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற இந்த நிலையில், ஆணைக் குழுக்களுக்குள் குழப்பநிலை உருவாகி இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகவே பார்க்க முடியும்.

நிறைவேற்று அதிகாரத்தினை மட்டுப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை பரவலாக்கும் தூய நோக்கோடு உருவாக்கப்பட்டது தான் ஆணைக் குழுக்கள் ஆகும்.

1. மனித உரிமைகள் ஆணைக்குழு
2. பொதுச்சேவை ஆணைக்குழு
3. நிதி ஆணைக்குழு
4. லஞ்ச ஊழல் ஆணை குழு
5. தேசிய போலீஸ் ஆணை குழு
6. எல்லை நிர்ணய ஆணைக் குழு
7. கணக்காய்வு ஆணைக்குழு
8. தேசிய பெறுகை ஆணைக்குழு
9. தேசிய தேர்தல் ஆணைக்குழு

அரசியலமைப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற இந்த ஒன்பது ஆணைக் குழுக்களும் சுதந்திரமாக செயல்பட்டாலே, ஜனநாயகப் பாதையில் நாடு வளர்ச்சியில் உச்சம் காண வழி பிறக்கும்.

ஆகவே, தேர்தல் ஆணைக்குழுவில் உள்ள ஐந்து உறுப்பினர்களுக்கும் இடையில் பிளவு நிலை இருக்கின்றது என்று பறைசாற்றுவதும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு இருப்பதாக, குற்றச்சாட்டுகளை முன்வைத்து செயல்படுவதும் ஓர் ஆரோக்கியமான அரசியல் நகர்வாக தெரியவில்லை.

தவறான அரசியல் தலைமைகளால் அழிக்கப்பட்ட நமது நாட்டின் சாம்பல் மேட்டில் இப்பொழுது நின்று கொண்டிருக்கிறோம். பீனிக்ஸ்களாக நாம் உயிர்த்தெழ வேண்டுமாக இருந்தால், மக்களை நோக்கிய நேர்மையான அரசியலை முன்னெடுங்கள்.

பரிமாணம் கல்முனை NET kalmunainet.com Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

# 13 படும் பாடு

நாட்டில் என்னென்னவெல்லாம் நடக்கிறது... ஒரு பொழுதை கழிப்பதே வேதனையாக இருக்கின்ற இந்த காலகட்டத்தில், வறட்டுத்தனமான அரசியலைப் பேசி அழிந்த நாட்டை மேலும் பேரழிவுக்குள் சிக்க வைக்கும் முயற்சிகள் தான் தொடர்கின்றன.

பொருளாதார மீட்சிக்கு கடன் கேட்டால், சர்வதேச நாணய நிதியமும் இழுத்தடிக்கிறது. அதேபோல, உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடத்துவதில் இன்னும் இழுபறி..

வாழ்வியலை தொலைத்து நிற்கின்ற இந்த நாட்டில், அரசியல்வாதிகளும் அரசியல் தலைமைகளும் நிமிர்த்த முடியாத வால் போல் செயல்படுகிறார்கள் என்பது வேதனைக்குரியது.

இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில், இன்று முக்கிய பேசுபொருள் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம்.

13 வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பது தமிழ் கட்சிகளின் ஏகோபித்த முடிவு. ஆயுதப் போராட்டம் ஒன்று மௌனிக்கப்பட்ட நிலையில், இதையாவது கேட்போம் என்பதுதான் அனைத்து தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு.

பதிமூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிர வேண்டும் என்று, இந்தியாவின் உதவியையும் தமிழ் கட்சிகள் நாடி இருக்கின்றன. அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய் சங்கர், இதற்கு வெளிப்படையாகவே பச்சைக் கொடி காட்டி விட்டுச் சென்றார்.

இந்த நிலையில், தென்பகுதி அரசியலில் ஏற்பட்டிருக்கும் ஏட்டிக்கு போட்டியான அரசியலால், 13க்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன. 13 ஐ முழுமையாக அமுல்படுத்தினால் நாடு பிளவடைவதை தவிர்க்க முடியாது என, விமல் வீர வன்ச, உதயகம்மன்பில, சரத் வீரசேகர, அத்துரெலிய ரத்ன தேரர் உட்பட பெரும்பாலான மொட்டு கட்சி அங்கத்தவர்களும் இந்தக் கோஷங்களை பரப்பி வருகிறார்கள்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட சர்வ கட்சி கூட்டத்திலும் 13க்கு எதிரான கருத்துக்கள் வெளிப்படையாகவே பேசப்பட்டன.

13 ஐ அமுல்படுத்துவதில் ஓரளவு ஆர்வம் காட்டி வருபவர் இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கடைசியாக நடந்த சர்வ கட்சி கூட்டத்தில் ஜனாதிபதி தன்னையே இழந்து விட்டார்.

"அரசியலமைப்புக்கான பதிமூன்றாவது திருத்தம் என்பது மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கும் ஒரு சட்டத் திருத்தம். அரசியலமைப்பில் உள்ள ஒரு திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்றால், அரசியலமைப்பிலிருந்து 13 ஐ நீக்குங்கள். அதற்காக, அரசியலமைப்புக்கு இன்னும் ஒரு திருத்தத்தை கொண்டு வந்து அதை இல்லாமல் செய்ய முடியும்" என ஆவேசமாக தெரிவித்தார்.

உண்மையில், பதிமூன்றாவது திருத்தம் என்பது, இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பிரசவம் என்று சொல்லலாம். அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவும் இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியும் செய்து கொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்டது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஒத்திவைக்கப்படும் சாத்தியம்

340 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற சந்தேகத்துடனான கேள்வி நாடு முழுவதும் பொதுவாக பேசப்பட்டு வருகிறது.

அதே நேரம் அரசியல் கட்சிகளும் பலத்த சந்தேகத்தின் மத்தியிலேயே தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

தேர்தல் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. மார்ச் ஒன்பதாம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கான வர்த்தமானி அறிவிப்பை தேர்தல் ஆணையம் இன்னும் வெளியிடவில்லை.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

# 9ஆவது பாராளுமன்றத்தின் 4ஆவது கூட்டத் தொடர் பெப். 8 இல் ஆரம்பம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 08 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33 உறுப்புரையின் (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தின் ஒரு கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும்போது ஜனாதிபதி பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து, அக்கிராசனத்தை ஏற்று அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் போது பாராளுமன்றத்தினால் முறையாக பரிசீலனை செய்யப்படாத வினாக்கள் மற்றும் பிரேரணைகள் இரத்தாவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவை தொடர்பில் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்ற இணைப்புக் குழு, உயர் பதவிகள் பற்றிய குழு, விசேட குழுக்கள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 2020 ஒகஸ்ட் 20 முதல் 2021 டிசம்பர் 12 வரையும், இரண்டாவது கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18 முதல் 2022 ஜூலை 28 வரையும் இடம்பெற்றது.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

# தமிழர்கள் மீது அரசு மறைமுக யுத்தம்; நேரடி போரை விடவும் ஆபத்து



"தமிழர்கள் மீது அரசாங்கம் மறைமுகமான யுத்தத்தை தொடுத்துக் கொண்டிருக்கின்றது. இது நேரடி யுத்தத்தை விடவும் மிகவும் ஆபத்தானது" என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார். இந்திய உயர் விருது பெற்ற வீரகேசரி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேசனை பாராட்டும் விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 30.01.2023 நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சீ.வி விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இன்னும் யுத்த நிலையை யே எதிர்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம் மாற்று வழியில் யுத்தத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. அதாவது, இதனை மறைமுக யுத்தம் என்று நான் நேரடியாக கூறுகிறேன். இந்த மறைமுக யுத்தமானது, நேரடியான ஒரு இராணுவ யுத்தத்தைவிடவும் மிகவும் ஆபத்தானதும் கொடுமையானதாகவும் இருக்கும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

# யாழ். மாநகர மேயர் வேட்பாளர் வித்யாதரன் போட்டியிலிருந்து விலகல்...?

## தமிழரசு கட்சிக்குள் குத்துவெட்டு



யாழ். உள்ளூராட்சி தேர்தலில் யாழ் மாநகரசபையில் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிடும் மூத்த ஊடகவியலாளர் என்.வித்தியாதரன் போட்டியிலிருந்து விலக தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

மேயர் வேட்பாளராக தாம் அறிவிக்கப்படுவார் என்று தமிழரசு கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரனால் வழங்கப்பட்ட உறுதிமொழி மீறப்பட்டுள்ளதால் அவர் போட்டியிலிருந்து விலகவுள்ளதாக அறியமுடிகிறது.

மூத்த ஊடகவியலாளர் என்.வித்தியாதரன் காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக பணியாற்றியவர். தமிழரசு கட்சியின் சார்பில் மேயர் வேட்பாளராக வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்காக பதவியை இராஜினாமா செய்துவிட்டு தேர்தல் களத்தில் இறங்கியவர் என்பது முக்கிய விடயமாகும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

# மின்வெட்டு: மனித உரிமைகள் ஆணைக்குழு உச்சமின்றில் வழக்கு

க.பொ.த உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்வெட்டு தொடர்பான பரிந்துரைகளுக்கு இணங்கத் தவறியதற்காக, இலங்கை மின்சார சபைத் தலைவர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின் சக்தி அமைப்பின் இரு அதிகாரிகள் பேச்சு வார்த்தையின் போது, 15 நாட்களுக்கு மின்சாரத்தை துண்டிப்பது இல்லையென இணக்கம் காணப்பட்ட போதும், தொடர்ந்தும் மின்சாரத்தை வெட்டி வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சாட்டி இருக்கிறது.

# சாரதியின் சாதுரியம்: 50 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய துணிவு

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், பஸ்ஸின் சாரதி பஸ்ஸை மண்மேட்டில் மோதச்செய்து பஸ்சை நிறுத்தி 50இற்கும் மேற்பட்ட பயணிகளின் உயிரை காப்பாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹப்புத்தளை, பெரகலை வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது திடீரென பிரேக் செயலிழந்துள்ளது. இதனையடுத்து பஸ் கீழ்நோக்கிச் செல்லும் போது, வலது புறம் உள்ள பள்ளம் ஒன்றின் குறுக்கே மண்மேட்டினை பிடித்து பஸ்சை நிறுத்தியுள்ளார் சாரதி.

இந்நிலையில், தனது உயிரைப் பணயம் வைத்து சாரதி இந்தச் செயலில் ஈடுபட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

## 13 படும்பாடு..

(ஆசிரியர்த் தலைப்பு...)

இதன் பின்பு உருவாக்கப்பட்ட இந்த திருத்தம், இலங்கையில் ஒன்பது மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கும் சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்குகிறது. அதிகாரங்களை பரவலாக்குகின்ற ஒரே ஒரு சட்ட அங்கீகாரமும் 13வது திருத்தம் ஆகும்.

13 ஐ அமுல்படுத்துவதனால் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு வந்துவிடும் என்று தமிழர்களும் கருதவில்லை ; தமிழ் கட்சிகளும் சொல்லவில்லை. அரசியல் ரீதியாக பலம் இழந்த நிலையில் இருக்கின்ற தமிழர்கள், கோவணத்தையாவது கொஞ்சம் மறைக்கலாம் என நினைக்கிறார்கள். அதனையும் உருவி எடுக்கலாம் என்றுதான் தென் பகுதி அரசியல் சக்திகள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

ஜனாதிபதி ரணிலின் ஆவேசத்தில் நியாயம் இருக்கிறது. 'நீங்கள் லேசாக எதிர்த்து விட்டு சென்று விடுவீர்கள். சர்வதேசத்துக்கு பதில் சொல்ல வேண்டியவன் நான்' இப்படி ஜனாதிபதி அடித்துக் கூறினார்.

13 ஐ அமுல்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா கொடுக்கும் அழுத்தம் கனதியானது. நாடு பிரியும் என்ற நிலை இருக்குமாக இருந்தால், இந்தியா இதில் மூச்சுக் கூட விடாது.. இந்திய நலனுக்கு பாதிப்பு ஏற்படாமல் உருவாக்கப்பட்டதே இந்த 13 வது திருத்தம் என்பதை இதுவரை தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

தமிழர் பிரச்சனையை வைத்துக் கொண்டு இனவாதத்தோடு குளிர் காய்ந்தால் நாட்டின் சுபிட்சம் என்பது எட்டாக் கனியாகிவிடும்.

# மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி: எரிபொருள் விலை குறையுமா?

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி, டபள்யு. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.27 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை இன்றைய தினம் 86.14 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை வீழ்ச்சியை பதிவு செய்து 2.66 அமெரிக்க டொலராக காணப்படுகிறது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள விலை சூத்திரத்தின் படி, எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதாவது எரிபொருள்களின் விலைகளும் குறைவடைய வேண்டும். இதன்படி எதிர்வரும் வாரங்களில் இரு பொருள்களின் விலை குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




# 'தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டும் தீர்வு அல்ல

## தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்

## - தமிழ் கட்சிகளின் தலைவர்கள்

"அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. வழங்கப்படும் உறுதிமொழிகளை ஆட்சியாளர்கள் அமுல்படுத்துவது இல்லை. எனவே, இனியும் தாமதிக்காது, தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், இந்தியாவிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு, கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை அரை மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபைத் தேர்தல், அரசியல் தீர்வுத் திட்டம் மற்றும் காணி விவகாரம் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, "தீர்வுத் திட்டம் சம்பந்தமாக இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களில் உத்தரவாதம் வழங்கப்பட்டாலும், அவை நிறைவேற்றப்படுவதில்லை. எனவே, விரைவில் தீர்வை வென்றெடுக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பு அவசியம்" என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் எடுத்துரைத்தனர்.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், "அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். கூட்டுச் செய்தியாளர் சந்திப்பிலும் பகிரங்கமாக அறிவித்தேன். 13 ஐ முழுமையாக அமுலாக்க இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்" என்று குறிப்பிட்டார்.

13 ஐ ஏற்றால், ஒற்றையாட்சியை ஏற்றதாகிவிடும் என இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. குறிப்பிட்டார்.

## 13:

### இருப்பதை அமுல்படுத்தாவிட்டால், அதுவும் இல்லாமல் போகலாம்

"இருப்பதை அமுல்படுத்தாவிட்டால், அதுவும் இல்லாமல்போகலாம். எனவே, இடைக்காலத் தீர்வாகவேனும் அதை ஏற்க வேண்டும். தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டும் தீர்வு அல்ல" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

"தெற்கின் நிலை தற்போது மாறியுள்ளது. அவர்களுடன் நாங்கள் பேசலாம். அவர்களின் மனநிலையையும் நாங்கள் மாற்றலாம்" என்று கஜேந்திரகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

கஜேந்திரகுமார் எம்.பியின் இந்தக் கருத்துக்குச் சுமந்திரன் எம்.பியும் இணங்கினார். எனினும், இருக்கின்ற அதிகாரங்களை நாங்கள் உடனே பெற வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தினார்.

"இலங்கையின் தெற்கு மக்களுடன் கலந்துரையாடும் பணியை ஒரு நாடு என்ற வகையில் இந்தியாவால் மேற்கொள்ள முடியாது. அதனை நீங்கள்தான் மேற்கொள்ள வேண்டும்" என்று தமிழ்த் தலைவர்களிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. தேர்தல் பணி காரணமாக இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# வேலன் சுவாமிகள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



தேசிய தைப்பொங்கல் விழாவிற்கு ஜனாதிபதி யாழிற்கு விஜயம் செய்த வேளை தேசிய தைப்பொங்கல் விழாவிற்கு எதிராக பேரணியை முன்னெடுத்த குற்றச்சாட்டில் வேலன் சுவாமிகள் கடந்த ஜனவரி 18ம் திகதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நாளைய தினம் (31) வேலன் சுவாமிகளை மீண்டும் நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் (30) வேலன் சுவாமி மற்றும் சட்டத்தரணி தவராசாவும்யாழ் மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தனர்.



# மின்வெட்டு: அவல நிலையில் மாணவ சமூகம் கைகட்டி வேடிக்கை பார்க்கும் அரசு :

குணா

நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய இலக்கும் பின்னணியும் என்ன என்பது புரியவில்லை. நிறைவேற்று அதிகாரம் விரும்பியதை செய்திருக்கிறது.

கூட்டத் தொடர்கள் ஒத்திவைக்கப்படுவது வழமை. என்றாலும், சாதாரண சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்ட வரலாறுகள் குறைவாகவே இருக்கின்றன.

கூட்டத் தொடர், பெப்ரவரி எட்டாம் தேதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க, கூட்டத் தொடரை புதிதாக ஆரம்பித்து வைத்து சிம்மாசன உரையாற்றுவார். இது பெரும்பாலும் அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க உரையாகவே இருக்கும். இதுதான் நாடாளுமன்ற சம்பிரதாயம்.

கூட்டத் தொடர் ஒத்திவைப்பு, அரசுக்கு எதிரான காய் நகர்த்தல்களை தடுப்பதற்கான முயற்சியாகவும் இருக்கும் அதே நேரம்,சில முக்கிய அரசியல் முன்னெடுப்புகளுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் கருதலாம்.

நாட்டினுடைய அரசியல் நிலை எதுவாக இருந்தாலும், இன்று மின்வெட்டு தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள், கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்கி இருக்கிறது என்பது உண்மை.

மின்சாரம் தொடர்ச்சியாக வெட்டப்பட்டு வருவதையும் அதனால் ஏற்படும் அசௌ கரியங்களையும் மிகவும் சகிப்புத் தன்மையோடு மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை (G.C.E A/L) எழுதுகின்ற மாணவர்களின் நலனை கொஞ்சமாவது கருதாமல், மின்வெட்டில் குறியாக இருந்து செயல்படும் இலங்கை மின்சார சபையின் நடவடிக்கைகளை மக்கள் ஆத்திரத்தோடு எதிர்கொள்கிறார்கள் என்பது தான் இன்றைய எதார்த்தம்.

பரீட்சை எழுதுகின்ற சுமார் 3,31,000 மாணவர்களின் நிலைதான் கவலைக்குரியதாக இருக்கின்றது. ஜனவரி 21 ஆம் தேதியிலிருந்து பிப்ரவரி 17ஆம் தேதி வரை, பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் மின்வெட்டு அமுல் படுத்துவதில்லை என்ற முடிவு எட்டப்பட்ட நிலையில், மின்வெட்டு தொடர்கின்றது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை, மின்சக்தி அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில், பொது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டது.

பரீட்சை முடியும் வரை மின்வெட்டை அமுல்படுத்துவதில்லை என்பது பொது இணக்கப்பாடு ஆகும். இந்த இணக்கப்பாட்டை இலங்கை மின்சார சபை பகிரங்கமாக மீறி இருக்கிறது. 15 நாட்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தபடாவிட்டால் இலங்கை மின்சார சபை பாரிய நட்டத்தை எட்டும் என்பது அவர்களுடைய அறிவிப்பு.

15 நாட்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கி சுமார் மூன்றரை இலட்சம் மாணவர்களின் வாழ்வுக்கு ஒளி ஏற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமே இருக்கிறது. ஆனால் அரசாங்கமும் இலங்கை மின்சார சபையும் நடந்து கொள்கின்ற விதம், மாணவர்களின் நலனில் எந்த அக்கறையும் இருப்பதாகவே தெரியவில்லை.

இவ்வளவு காலமும் தற்துணிவோடு செயல்படாத இலங்கை மின்சார சபைக்கு இப்பொழுது மட்டும் இந்த துணிவு வந்தது எப்படி..? நிறைவேற்று அதிகாரம், மின் சக்தி அமைச்சு இரண்டினதும் அரசியல் பலத்தோடு தான் இலங்கை மின்சார சபை செயல்படுகிறது என்பது தெட்டத் தெளிவாகி இருக்கிறது.

புதிய மின் கட்டண திருத்தத்தின் பின்பு, இலங்கை மின்சார சபை 108 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டி இருப்பதாக முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க மிகத் தெளிவாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையிலும், நஷ்டத்தை காரணமாகக் காட்டி, மின்வெட்டை தொடர்ச்சியாக அமுல்படுத்துவதை பார்க்கின்ற பொழுது, ஏதோ ஒரு பழி வாங்கும் முயற்சியில் மின்வெட்டு துரும்பாக பயன்படுத்தப்படுகிறது போல் தான் தெரிகிறது.

ஒன்று,பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவரை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாக இருக்கலாம். அல்லது விருப்பமில்லாத தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு தயாராக இல்லாத நிலையில், இப்படியான ஒரு அசௌகரிய நிலையை ஏற்படுத்தலாம் என்றுதான் புரியக் கூடியதாக இருக்கின்றது..

அமைச்சர் கஞ்சன விஜயசேகர புதிய விடயம் ஒன்றை இப்பொழுது பரப்புகிறார். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடந்த பேச்சுவார்த்தையில் முத்தரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இலங்கை மின்சார சபையின் சார்பிலே கலந்து கொண்ட அரசாங்க தரப்பு அதிகாரிகள் இருவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அச்சுறுத்தப்பட்ட நிலையிலே இணக்கப்பாட்டில் ஒப்பமிட்டார்கள் என்று அமைச்சர் கஞ்சன விஜய சேகர குற்றம் சாட்டி இருக்கிறார்.

மின்வெட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அந்த அதிகாரிகள் இருவரும் பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டிருக்கிறார்கள். என்றாலும், உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையிலேயே ஒப்பமிட்டார்கள் என அமைச்சர் கூறுகிறார்.

நாடு ஏற்கனவே பொருளாதாரத்தில் அழிந்து கிடக்கின்றது. இழப்பதற்கு இனி எதுவுமே இல்லை. சகலதையுமே இழந்து வெளிநாடுகளை கையேந்தி நிற்கின்றோம். இந்த இக்கட்டான நிலையில், மின்வெட்டை அமுல்படுத்தி நட்டத்தை குறைக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பது உண்மை. ஆனால், இந்த நாட்டின் மாணவர்களின் நன்மைகருதி மின்சாரத்துக்காக செலவிடும் தொகை எதிர்கால சந்ததியின் முதலீடு என்பதை அரசு புரிந்து செயல்பட வேண்டும். அரசியல் தலைமைகளால் எத்தனையோ இழந்து விட்டோம், மாணவச் சந்ததிக்காக இன்னும் கொஞ்சம் இழந்தால் தான் என்ன?

அரசியல் காய் நகர்த்தல்களில் மாணவ சமூகம் பாதிக்கப்படக்கூடாது. அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரையாவது பல்லைக் கடித்துக்கொண்டு மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குங்கள். இதுதான் நாட்டு மக்களின் இன்றைய எதிர்பார்ப்பாக இருக்கிறது.




பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற எஸ். புனிதனை பாராட்டி கௌரவிக்கும் விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, பாடசாலையின் முன்னாள் அதிபர் வே. பாலசுப்பிரமணியன் மற்றும் தற்போதைய அதிபர் எஸ்.வில்வராஜா ஆகியோர் அவரை பொன்னாடை போர்த்தி கௌரவித்து நினைவு சின்னம் வழங்கிய போது..

பட உதவி - பேரின்ப ராஜா

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகமாக கணேசராசா

உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி முத்துலிங்கம் கணேசராசா உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு வெல்லாவெளியில் மூத்தாப்போடி மாணிக்கப்போடி பூசகர் குடும்பத்தில் முத்துலிங்கம் அன்னபூரணம் தம்பதியின் புதல்வரான இவர் மட்டக்களப்பு வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலையில் உயர் கல்வியையும் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வணிகமாணி சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார்.

1993ம் ஆண்டு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை இறைவரி சேவையில் வரிமதிப்பாளராக இணைந்து கொண்ட இவர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA), இலங்கை வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NIBM) போன்றவற்றில் டிப்ளோமா பட்டங்களையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் பெற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் மற்றும் இறைவரித் திணைக்கள புலமைப்பரிசில் மூலம் சிறி



ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் (PIM) "வரியியலில்" வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ள இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் பயின்ற ஒரு சட்டத்தரணியுமாவார்.

இலங்கை அரசினதும் அதுபோலவே வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் மூலமும் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, பாகிஸ்தான், தென்கொரியா, பொட்ஸ்வானா, நெதர்லாந்து போன்ற பல நாடுகளில் பல தடவைகள் துறைசார் வெளிநாட்டு கற்கை நெறிகளையும் பயிற்சிகளையும் பெற்றுள்ள இவர் இலங்கை இறைவரிச் சேவையில் வரி மதிப்பாளர், சிரேஷ்ட வரிமதிப்பாளர், பொறுப்பு வாய்ந்த சிரேஷ்ட வரிமதிப்பாளர், பிரதி ஆணையாளர், ஆணையாளர், சிரேஷ்ட ஆணையாளர் என படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்று நீண்ட காலம் கொழும்பு தலைமையகத்தில் சிறப்பாக சேவையாற்றிய இவர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருசேர இரு பிராந்திய பணிமனைகளிலும் ஆணையாளராக சிறப்புற நிருவாகம் செய்த பெருமையையும் பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் "வரி முகாமைத்துவம்" எனும் பாட நெறியை பல வருடங்களாக கற்பிக்கும் வருகை விரிவுரையாளரான இவர் தனது துறைசார் தொழிலுக்கும் அப்பால் கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர், மட்டக்களப்பு பிரஜைகள் அமைப்பின் துணைத் தலைவர் மற்றும் சர்வதேச ரோட்டரிக் கழகம், மட்டக்களப்பு கேன்ஸர் அமைப்பு, விவேகானந்த நற்பணி மன்றம், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம், வெல்லாவெளி முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபை போன்றவற்றினூடாக பல்வேறு சமய சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கை இறைவரிச் சேவையில் "பிரதி ஆணையாளர் நாயகம்" எனும் பதவியைப் பெற்ற முதலாவது தமிழர் இவரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கலைக் கொழுந்துக்கு கவலையுடன் காணிக்கை



கலைக் கொழுந்தன் என்ற ஒரு சமூக சிந்தனையாளனை நாம் இழந்து இருக்கின்றோம்.

எழுத்தாளன், கவிஞன், பகுத்தறிவு பாசறையின் பண்பாளன், பேரிலக்கிய ஆளுமை, சிறந்த அரசியல் பேச்சாளர் என பன்முக ஆளுமை கொண்ட கலைக்கொழுந்தன், அடக்கத்தின் அடையாளமாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட பெருமைக்குரிய சிந்தனையாளன்.

வறுமை வாட்டிய பொழுதிலும், எழுத்தையும் வாசிப்பையும் இலக்கியத்தையும் உயிர் மூச்சாக நேசித்த ஒரு கனவான்.

தந்தை செல்வா, அமரர் அமிர்தலிங்கம், அமரர் வேல்முருகு மாஸ்டர் ஆகியோர் வழியில் தன் கொள்கையை வகுத்து செயல்பட்ட அண்ணன் கலைகொழுந்தன், இறுதி மூச்சு வரை சோரம் போகாத கொள்கைவாதியாகவே திகழ்ந்தார். 1974 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து தமிழரசு கட்சியின் தீவிர செயல்பாட்டாளராக இருந்த கலைகொழுந்தன், தமிழ் தேசியத்திற்காக என்றும் தன் குரலை உயர்த்திப் பேசியவர்.

காணும் போதெல்லாம் மூச்சு வாங்க வாங்க.. தமிழரின் அவல நிலையை கவலையோடு பேசும் இனப் பற்றாளன் இவர்.

என்ன செய்ய?.. காலன் கொடியவன் ...

"கண் கெட்ட காலனுக்கு மண்போட யாருண்டோ.." என்ற வாசகத்தை உங்களிடம் தான் நான் கற்றேன்.

அண்ணன்.... நிம்மதியாக தூங்குங்கள். காலம் சுழன்று வரும்போது சந்திப்போம்...

**உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்**

முயலகன்.

### தமிழர்கள் மீது... 3 ஆம் பக்க தொடர்ச்சி...

இராணுவ ஆக்கிரமிப்பு, பொறுப்புக் கூறல், அரசியல் கைதிகளை தொடர்ந்தும் தடுத்து வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளால் தமிழர்கள் இன்னும் யுத்த நிலையையே எதிர்கொள்கின்றார்கள். போதைப் பொருள் பாவனை என்பது தமிழர் பிரதேசத்திலே அதிகரித்திருக்கின்றது. இது நன்கு திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகும். இத்தகைய கெடுபிடி நிலைகளால் எமது இளைஞர்கள் நாட்டை விட்டு தப்பி செல்கிறார்கள்.

ஊடகவியலாளர்கள் இந்த மறைமுக யுத்த நிலையை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்த யுத்த நிலையால் அப்பாவி மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றார்கள். ஊடகவியலாளர்கள் மிகவும் பொறுப்போடும் சமூக அக்கறையோடும் செயல்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதை இந்த இடத்தில் நான் அடித்துக் கூறுகிறேன்.

இந்த நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு கடுமையான அச்சுறுத்தல் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவைகள் எல்லாம் தனியாக எழுதப்பட வேண்டிய சரித்திரங்கள். ஆகவே, குமார் நடேசன் போன்றவர்களினதும் ஊடகவியலாளர்களினதும் பணிகள் என்றும் எமது மக்களை வழி நடத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று கூறினார்.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், அரசியலமைப்பி உள்ள ஒரே ஒரு அதிகார பகிர்வான 13 வது திருத்தம் மாற்றப்பட வேண்டுமாகஇருந்தால்அரசியலமைப்புக்கான இன்னொரு திருத்தமாக 22 ஆவது திருத்தத்தை முன்வைத்து, 13-வது திருத்தத்தை இல்லாமல் செய்யுங்கள் என ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி என்னுடைய இந்த கருத்தின் ஆழத்தை இந்தியா நன்கு புரிந்து கொள்ள வேண்டும். 13 வது திருத்தம் தொடர்பிலே இந்தியா மிகவும் அக்கறையோடு இருக்கிறது என்பதை நாம் அறிவோம் என்றும் சி. வி விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

### உள்ளூராட்சி ம... 3 ஆம் பக்க தொடர்ச்சி...

தேர்தல் திணைக்களம் திகதியை ஊடகங்களுக்கு அறிவித்திருந்த பொழுதிலும் உத்தியோகபூர்வமான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடாதது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஐந்து பேர் கொண்டு தேர்தல் ஆணையத்தில், பி.எஸ்.எம் சால்ஸ் என்பவர் இராஜினாமா செய்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி அவருடைய ராயினமாவை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற தகவல் வழியா இருந்த பொழுதிலும் ராஜினமா செய்திருக்கிறார் என்பது ஒரு விதமாக இருக்கிறது. தேர்தல் தொடர்பான வர்த்த மானியை வெளியிடுவதற்கு, ஆணைக் குழுவில் உள்ள ஐந்து பேரும் ஒப்பமிட வேண்டும் என்பது விதி.

ஒருவர் ராஜினாமா செய்தாலும், பக்தமானி அறிவிப்பை வெளியிட முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிகால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். இந்த நிலைப்பாடும் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு தேர்தல் நடத்துவதை ஜனாதிபதி விரும்பவில்லை. அதே நேரம் மொட்டு கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராக இல்லை. இதனால் முட்டுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் பிரச்சாரங்களில் மந்த நிலையில் பணியாற்றுவதை பார்க்கின்ற பொழுதும் தேர்தல் ஒத்தி வைக்கப்படலாம் என்ற சந்தேகம் எழுகின்றது

ஒருவாறு, காலத்தை இழுத்தடித்தால், இடைப்பட்ட காலங்களில் அரசாங்கம் எவ்வாறு தன்னைச் சுதாகரித்துக் கொள்ளும். நீதிமன்றத் தீர்ப்புத்தான், இன்றுள்ள மயக்கங்களைத் தீர்த்து வைக்கும். எவ்வாறானாலும், பிரச்சாரங்களுக்கு ஒன்றரை மாதகால அவகாசம் வழங்கப்படுவதே வழமை. இப்போது ஏற்பட்டுள்ள இழுபறிகள், பிரச்சாரத்துக்கான நாட்கள் சிலவற்றையும் கடத்தி விட்டன. எனவே, மார்ச் 09 இல், தேர்தலை நடத்தும் சாத்தியம் ஏற்படுமா? இந்த நிலைகளை வைத்து பார்க்கின்ற பொழுது,தேர்தல் நடத்தப்படாது என்ற ஊகம்தான் வலுவடைந்து இருக்கிறது.

### 9ஆவது பாரா... 3 ஆம் பக்க தொடர்ச்சி...

அதற்கமைய, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் 2022 ஒகஸ்ட் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் ஜனவரி 27ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரும் வரை பாராளுமன்றம் 58 நாட்கள் கூடியிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஜனவரி 27ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் 70 (1) உறுப்புரைக்கு அமைய அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு அமைய பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது

### யாழ். மாநக... 3 ஆம் பக்க தொடர்ச்சி...

வித்தியாதரனுக்கு மேயர் பதவி வழங்குவதற்கு தமிழரசு கட்சி ஏற்கனவே எடுத்த தீர்மானத்திலிருந்து சற்று சறுக்கி இருப்பதாக தெரிய வருகிறது.

தற்போது, யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராக மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கும் ஆனோல்டை மேயர் வேட்பாளராக களமிறக்கி இருப்பதாக கட்சி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இதனால், ஆத்திரம் அடைந்துள்ள வித்யாதரன், தேர்தல் பிரச்சாரப் பணிகளில் இருந்து முற்றாக ஒதுங்கி இருப்பதாக தெரிய வருகிறது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்யாதரன் தற்போது கொழும்பில் தங்கி இருக்கிறார் என்றும் அரசியல் கட்சி வட்டாரம் ஒன்று கூறியது.

# ஹிருணிகா: ஆட்கடத்தல் வழக்கு பெப்ரவரி 28 க்கு ஒத்திவைப்பு

கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, டிஃபென்டர் மூலம் இளைஞரை கடத்திச் சென்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழக்கு பெப்ரவரி 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. எவ்வாறாயினும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, சாட்சியங்களை முன்னெடுப்பதற்கு மேலதிக திகதியை கோரினார்.

இதற்கு முன்னர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பாடசாலை மாணவி ஒருவரை தவிர, கடத்தல் வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்ட மற்ற 7 பேருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடத்தல் குற்றச்சாட்டுக்கள் தவிர, தெமட்டகொடையில் கடத்தப்பட்ட அமில பிரியங்கரை அச்சுறுத்தல், தாக்குதல் மற்றும் மிரட்டல் உட்பட 29 குற்றச்சாட்டுகள் ஒன்பது பேருக்கும் எதிராக சட்டமா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொடைக்கு கறுப்புப் பாதுகாப்பு வாகனத்தில் வந்த சிலர் தம்மை கடத்திச் சென்று தாக்கியதாக முறைப்பாட்டாளர் அமில பிரியங்கர குற்றஞ்சாட்டினார்.

# 13: தெற்கின் சலசலப்பும் முஸ்லிம்களின் முணுமுணுப்பும்

(சுஐப் எம். காசிம்)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள், தென்னிலங்கையில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்துள்ளது. சர்வகட்சி கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி இதைப் பகிரங்கமாக அறிவித்துள்ளமை சர்வதேசத்தின் அழுத்தத்திலிருந்து இனியும் தப்பிக்க முடியாது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள் மற்றும் உதவிகளை சர்வதேசத்திலிருந்து எதிர்பார்த்துள்ள ஜனாதிபதிக்கு இனியும் பொய் சொல்லி, சர்வதேசத்தை ஏமாற்ற முடியாத நிலைமைகளே ஏற்பட்டுள்ளன. அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விஷேட அதிகாரங்களைப் பயன்படுத்தி, இந்த 13 அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனால், இதில் எவ்வித சட்டச் சிக்கல்களும் ஏற்படப்போவதில்லை. மேலும், மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பு அனுமதித்துள்ள அதிகாரங்களையே ஜனாதிபதி வழங்கவுள்ளதால், பாராளுமன்றத்தால் இதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தடுத்த நிறுத்த முனைவதானால், தனிநபர் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுவது அவசியம்.

இவ்வாறு ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து, சிறுபான்மையினரின் அரசியல் தீர்வுக்குத் தடையாக உள்ளதை வெளிப்படையாகத் தெரிவிக்க எந்தக் கட்சிகளும் விரும்பப்போவதும் இல்லை.

மேலும், ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து, சர்வதேசத்தின் அபிலாஷைகளுக்குத் தடையாக அல்லது குறுக்காகச் செயற்பட்டால் பொருளாதார உதவிகள் தடைப்படும் ஆபத்துக்களும் உள்ளன. இதனால், நாடு இன்னும், அதலபாதாள நிலைக்குச் செல்வதை எவராலும் தடுக்க முடியாத நிலையே ஏற்படும்.

இது குறித்து சர்வ கட்சிக் கூட்டத்தில் மிகத் தெளிவாகக் கருத்துரைத்த ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க, அரசியமைப்பின் 13 ஐ நிறைவேற்ற விரும்பாவிடின், இதை ஒழிப்பதற்கு தனிநபர் பிரேரணையைக் கொண்டுவாருங்கள் எனக் கோரியுள்ளமை, சமஷ்டித் தீர்வுக்கு தான், தயாரில்லை என்பதைக் காட்டியுள்ளதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்த ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளதால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் தலைமைகள் கூட்டாகச் சிந்தித்து ஒரு பொதுப் பிரேரணையைச் சமர்ப்பிப்பது அவசியம்.

இந்தத் திருத்தம் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதை வலியுறுத்துவதால், இம்மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு அதிக பிரச்சினைகள் ஏற்படவுள்ளன. புலிகள் இருந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைப்போல் இல்லாவிடினும், காணி அதிகாரங்கள் வடகிழக்கு முஸ்லிம்களைப் பாதிக்கவே செய்யும்.

பெரும் நிலப்பரப்பில் அடுத்தடுத்ததாக உள்ள தமிழ், முஸ்லிம்களின் இருப்பிடங்கள், தொழில்தளங்கள், காணிகள் மற்றும் நிலவெல்லைகள் ஆயுத முனையில் அச்சுறுத்தி அபகரிக்கப்படாவிடினும் அதிகாரப்பலம் இன்னும் நிர்வாகக் கெடுபிடிகளால் இவை, பிடுங்கப்படும் நிலைமைகளே உள்ளன.

எனவே, சிதறுண்டு திசைமாறிய முஸ்லிம் தலைமைகள் எல்லாம், தாயை நோக்கி குஞ்சுப் பறவைகள் கூட்டுக்குள் வருவதைப்போல் வரவேண்டியுள்ளது. இது, தேர்தல் கால ஆசைகளைப் போலன்றி, முஸ்லிம்களின் உயிர் மூச்சோடு ஒன்றுபட்ட வாழ்வியல் பிரச்சினை என்பதை முஸ்லிம் தலைமைகள் புரிந்து கொள்வது அவசியம்.

இணைந்த மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதை பெரும்பாலான முஸ்லிம்கள் பொருட்படுத்தவில்லை. காரணம், கிழக்கில் தமிழ்பேசும் பொலிஸார் நூறுபேர் நியமிக்கப்படுகையில் 33 முஸ்லிம்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். காணி விடயம் அவ்வாறில்லை. அதிகாரத்துக்கு வரப்போகும் சக்திகளின் மனநிலைகளைப் பொறுத்தே இந்த ஆபத்துக்கள் ஏற்படப்போகின்றன.

# முஸ்லிம் தலைமைகள் காலத்தை கடத்திவிட்டு கூக்குரலிடுவதில் அர்த்தம் இல்லை

## கட்சிகளில் போட்டியிடுவதில் முஸ்லிம் புத்திஜீவிகள் ஆர்வம் காட்டாதது ஏன்?

நிப்ராஸ்

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையில் அண்மைக் காலமாக இந்தியா எடுத்து வரும் அக்கறையை முஸ்லிம் தலைமைகள் கண்டுகொள்ளாமல் இருப்பது, மற்றுமொரு அடிமைச் சாசனத்துக்கு அடிமையாகும் நிலையை ஏற்படுத்தப் போவதாக முஸ்லிம்கள் தரப்பில் அச்சம் உருவாகி இருக்கிறது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் எழுதப்படும் வரை, இதுபோன்றதொரு அறியாமையில் முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர். இதனால், இதன் விளைவை இன்று வரை முஸ்லிம்கள் அனுபவிக்கின்றனர். இந்த 13இல், வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களே ஒரு மொழியைப் பேசும் சமூகங்களுக்குள் சிறுபான்மை, பெரும்பான்மை எனும் வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இந்நிலையில், இதனை மீண்டும் முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசுக்கு தொடர்ந்து இந்தியா அழுத்தங்களை வழங்குவது குறித்து முஸ்லிம் கட்சிகள் கவனம் எடுப்பது அவசியம்.

பொலிஸ் அதிகாரங்களால் முஸ்லிம்களுக்கு பெரிதாக பிரச்சினைகள் ஏற்பட்டிராவிடினும், காணி அதிகாரங்கள்தான் இம்மாகாணங்களில் முஸ்லிம்களின் இருப்புக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தின. வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போதிலும், தனியாகப் பிரிக்கப்பட்டிருந்த நிர்வாகங்களிலும் இதுகுறித்த நெருக்கடிகளை முஸ்லிம்கள் எதிர்கொண்டனர்.

எனவே, இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்பட்டு ஒருமொழிச் சமூகங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படாமல், இச்சமூகங்களை வழிநடாத்தும் பொறுப்புக்களை ஒரு மொழிச் சமூகங்களது தலைமைகள் பாரமெடுப்பது அவசியம்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கர்தான், இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்தவர். இதனால், இது குறித்த அனுபவங்கள் அவரிடம் அதிகமுள்ளன. இதைப் பயன்படுத்துவதில் தமிழ் தேசியம் உச்சளவு கவனம் செலுத்தியிருந்தது.

ஆனால், முஸ்லிம் தலைமைகள் இவரின் வருகையை இம்முறை கண்டு கொள்ளவில்லை. தேர்தல் காலத்துக் களியாட்டங்களில் காலங்கடத்தியதால், இவர்களது கவனம் திசை திரும்பியதோ தெரியாது. இம்மாத இறுதியில், சர்வ கட்சி மாநாடு கூட்டப்படவுள்ளதால், அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதில் இந்தியா எடுத்து வரும் அக்கறை, செலுத்தி வரும் அழுத்தங்களை அறிவதில் அக்கறை செலுத்துவதில் கவனம் எடுப்பதே சிறந்தது. இதைச் செய்யாமல்,

காலத்தை கைவிட்டு கூக்குரலிடுவதில் அர்த்தம் இல்லை. ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் நினைத்தால், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியும். ஏற்கனவே இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் இவை உள்ளடக்கப்பட்டிருப்பதால் பாராளுமன்றத்தின் அனுமதியைக் கோர வேண்டியதில்லை. வைத்தியசாலைகள், பாடசாலைகள் சிலவற்றை, மாகாண சபைகளிடமிருந்து நிறைவேற்றுகிகாரம் பிடுங்கிக் கொண்டமை ஞாபகங்களில் உள்ளன. வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் தவிர, தென்னிலங்கை ஆளுநர்களும், 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு கோருவதாக அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனவே, இதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும் சூழலில், முஸ்லிம் தலைமைகள் பாராமுகமாகச் செயற்படக் கூடாது.

இவர்களின் கடந்த காலச் செயற்பாடுகள் பாராமுகமாக இருந்ததன் விளைவு, இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் நிறுத்துவதற்கு சிறந்த வேட்பாளர்களைத் தெரிய முடியாமல் தலைமைகள் தடுமாறின. முஸ்லிம் அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படும் விடயமாக இது மாறியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் ஸ்தாபகத் தலைவர், ஸ்தாபகத் தவிசாளர் ஆகியோரது காலங்களில் வேட்பாளர்களைத் தெரிவதில் சிக்கல்கள் ஏற்படுமளவுக்கு மிகையளவில் வேட்பாளர்கள் முன்வந்தனர். புலிகளால் எதிர்க்கப்பட்ட உள்ளூராட்சி சபை (1987) மாகாண சபை (1988) தேர்தல்களில் கூட அதிகளவு வேட்பாளர்கள் முன்வந்திருந்தனர். இது, அந்தக் கால சமூக எழுச்சிக்கு அடையாளமாகத் தென்பட்டது.

ஆனால், இன்று எந்த அச்சுறுத்தல்களும் இல்லாதிருந்தும் வேட்பாளர்களைத் தேடுவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டன.

இரவு, பகலாகத் தேடியும் சிறந்த வேட்பாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியாத வறுமை நிலையிலேயே முஸ்லிம் அரசியல் உள்ளது.

இதற்கான காரணங்கள், பின்னணிகளைக் கண்டு கொள்வதில் முஸ்லிம் புத்திஜீவிகளின் கவனம் திரும்பியுள்ளது.

தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள இழுபறியும், மக்களின் வாக்குகளில்லாமல் குறுக்காக ஒரு ஜனாதிபதி தெரிவானமையும் ஆதரவாளர்களை ஆர்வம் குன்றச் செய்திருக்கலாம். இல்லாவிடின் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற குழப்பம் நிலவும் நிலையில், சம்பளமில்லாத விடுமுறையை (no pay) எடுப்பதில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தயங்கினார்களா? இல்லை, இவை எல்லாவற்றையும்விட, முஸ்லிம்தலைமைகளின் கையாலாகாத காரியங்களுக்குப் பின்னால் செல்வதில்லை என முஸ்லிம்கள் தீர்மானித்தார்களோ தெரியாது.



# சிரட்டைக்குள் பிறந்த வாழ்வாதாரம்





வ. சக்திவேல்

"கைத் தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்", "உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே" எனும் தத்துவங்களை உணர வைக்கும் பாடல் வரிகளை நாம் கேட்டிருக்கின்றோம்.

பல்தேசியக் கம்பனிகளின் உற்பத்திகளும், ஏற்றுமதி, இறக்குமதிகளுமாக, உலகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் மேற்படி வரிகளுக்குக் கட்டியம் கூறுவது போன்று கிராமங்களில் சிலர் தமது கைத்தொழில் முயற்சிகளை இன்னும் கைவிடாது மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

தினமும் சமையலுக்குப் பயன்படுத்திவிட்டு வீசி எறியப்படும், அல்லது எரிக்கப்படும் சிரட்டைகளைப் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தையே உருட்டிச் செல்லும், ஒருவரை எமது தேடல் கண்டுகொண்டது.

ஆரம்பத்தில் நான் தச்சு வேலை செய்து வந்தேன். பின்னர் எனக்குப் பாரிய நோய் தாக்கியது. அதிலிருந்து தச்சு வேலையை விட்டுவிட்டு ஆலயங்களுக்குரிய எருது, மூசுகம், மயில், உள்ளிட்ட வாகனங்களை மரங்களில் செதுக்கி பல கோயில்களுக்கு வழங்கி வந்தேன். பின்னர் என்னால் வெளியில் சென்று நடமாடித் திரிவதற்கு எனது உடல்நிலைமை இடம்கொடுக்கவில்லை. வீட்டிலிருக்கும் நாம் பிறரிடம் கையேந்தாமல் சிரட்டையில் அகப்பை செய்து விற்றால் என்ன? என்ற யோசனை எனக்குள் எழுந்தது. பின்னர் நான் அகப்பைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்தேன்.

பின்னர் சிரட்டைகளைப் பயன்படுத்தி தேநீர் குவளை, பூச்சாடி, மற்றும் அழகு சாதனைப் பொருட்கள் செய்வது தொடர்பில் நான் ஊடகங்களில் பார்த்து அறிந்தேன். சிரட்டையில் அகப்பை செய்யும் நமக்கு அதனைக் கொண்டு ஏன் நாமும் வேறு பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியாது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது.

தற்போது நான் தேநீர் குவளை, உப்பு வைக்கும் பாத்திரம், வீடுகளிலும், ஆலயங்களிலும் பாவிக்கும், சந்தணம், குங்கும், விபூதி, வைக்கும் தட்டுக்கள், கறிகள் பரிமாறும் குவளைகள், தண்ணீர் அருந்தும் பாத்திரம், பூச்சாடி, மயில், குருவி, கொக்கு, ஐஸ்கிறீம் கப், கைகளைக் தொற்று நீக்கும் திரவங்ளைப் பாவிக்கும் பாத்திரம், கீடெக், அகப்பைகள், உள்ளிட்ட பல பாவனைப் பொருட்களும் ஆலங்காரப் பொருட்களுமாக நானும் எனது மனைவியும் சேர்ந்து உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்.

2007ஆம் ஆண்டிலிருந்து நாம் இதனை மேற்கொண்டு வருகின்றோம். எனினும் இவைகளை உற்பத்தி செய்வதென்பது மிகவும் கடினமானதாகும். மிகவும் நுணுக்கங்களும் மிகுந்த பொறுமையும் அவதானமும் தேவை. ஆனாலும், நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உள்ளூரில் கேள்வி என்பது மிக மிக குறைவாகவே உள்ளன. விற்பனை செய்வதென்பது மிகவும் கடினமாகவே உள்ளது. நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நியாய விலைக்கு விற்பனை செய்யலாம் எனவும், அதிலிருந்து நாம் ஓரளவு எதிர்பார்க்கும் இலாபம் ஈட்டலாம் எனவும் பலரும் தெரிவிக்கின்றனர். ஆனால் அது இது வரைக்கும் எமக்கு கைகூடி வரவில்லை.

இதுவரைக்கும் எமது இத்தொழிலுக்கு யாரும் உதவமுன்வர வில்லை. ஆனால், தொழில்களுக்குரிய பொருட்களை கொள்வனவு



## உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமல் தொழிலாளர்கள் திண்டாட்டம்

செய்வதற் கு ஒரு இலட்சம் ரூபாய் கடன், பிரதேச செயலகத்தினூடாக பெற்றுத் தருவதாக கூறியுள்ளார்கள். அது கிடைக்கும் பட்சத்தில் பொருட்களை கொள்வனது செய்துவிட்டு பின்னர் கிடைக்கும் வருமானத்தில் மாதாந்தம் அதனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

ஆனாலும், நான் இத்தொழிலை மேலும் மேம்படுத்த வேண்டும் என சிந்திக்கின்றேன். அதற்கு சில தடைகளும் உள்ளன. நிலையான துளையிடும் மெசின், வெட்டுவதற்குரிய மெசின், கடைச்சல் மெசின், உள்ளிட்ட பல சிறிய சிறிய மெசின்கள், தேவையாகவுள்ளது.

புதியவர்களை இத்தொழிலைப் பழக்கி எடுப்பதற்குரிய கொட்டகை வசதியும் எம்மிடம் போதாதுள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வசிப்பவர்கள் அதிகம்பேர் உள்ளார்கள். அவ்வாறானவர்கள் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அவர்கள்வாழும்நாடுகளில்அதிகசந்தைவாய்ப்பு உள்ளதாக அறிகின்றோம். எனவே எமது உற்பத்திகளை அவ்வாறானவர்கள் கொள்வனவு செய்தாலும், அல்லது ஏற்றுமதி செய்தாலும், நாம் இங்கு 300ரூபாவுக்கு விற்பனை செய்யும் பொருளை 600ரூபாவுக்கு வெளி நாடுகளிலுள்ளோருக்கு விற்றால் எமது வாழ்வாதாரமும் மேம்படும். ஆனாலும் எமக்கு அவ்வாறானவர்களின் தொடர்புகள் எமக்குக் கிடையாது.



தற்போதுள்ள இளைஞர்கள் பிறரிடம கையேந்தி கூலி வேலைக்குப் போகின்றார்கள், யுவதிகள் வீட்டிலுள்ளார்கள். நாம் இத்தொழிலை பழக்கி விடுகின்றோம் வாருங்கள் என அழைத்தாலும் வருகின்றார்கள் இல்லை. மாறாக எனது தொழிலுக் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி.ஆர்.இராகுலநாயகி, மற்றும் அதனோடிணைந்த சிறுகைத் தொழில் உத்தியோகஸ்த்தர்கள் எனக்கு வேண்டிய ஆலோசனைகளையும், வழக்கி வருகின்றார்கள் எனத் தெரிவிக்கின்றார். மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் பாலையடிவட்டைக் கிராமத்திலுள்ள அந்தோணிப்பிள்ளை சுலோஜன்.

எனினும் சிரைட்டையை மூலப் பொருளாக் கொண்டு தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு தொழில் நுட்ப ரீதியான பயிற்சிகளை மேற்கொள்வதற்குரிய திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளோம். இவ்வாறு ஒரே தொழில்களை மேற்கொள்பவர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து ஒரே அமைப்பாக உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயந்திர வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிரட்டையை மூலப் பொருளாகக் கொண்டு சுமார் 15இற்கு மேற்பட்டவர்கள் தொழில் முனைபவர்களாக பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் சிரட்டையிலிருந்து உற்பத்தி செய்யும் மூலப்பொருட்களை வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிநெறி ஒன்றும் அடுத்த மாதம் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் வலது குறைந்தோரையும் நாம் உள்வாங்கியுள்ளோம்.வெல்லாவெளியில் இவர்களுக்கான உற்பத்தி நிலையம் ஒன்றை ஒருவாக்குவதற்குரிய யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், இவர்களின் உற்பத்திகளுக்கு உள்ளூரில் சந்தை வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. எனினும் மட்டக்களப்பு மற்றும் கல்முனை, போன்ற ஒருசில இடங்களில் இந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு வாழ்வாதாரத் தொழிலை முன்கொண்டு செல்பவர்களுக்கு சமூர்த்தி திட்டத்தினூடாக இலகு கடன்வசதிளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும், பரந்து சென்று வாழ்ந்தாலும், அவர்கள் தாங்கள் பிறந்த வளர்ந்த கிராமங்களை ஒருகணம்சிந்திக்கத்தவறாமல்அவர்களால் முடிந்த உதவிகளையும் மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்து. அதபோல் சுலோஜன் போன்றோர் தமது நோய் நிலமையையும் கருத்திற் கொள்ளாது பிறரிடம் யையேந்தாமல் சுயதொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் அவ்வாறானவர்களுக்கு உந்துசக்தியளிக்கவேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.





# இரத்தத்தில் தோய்ந்த ஊடகத்தின் குரல்

வ.சக்திவேல்

கொடூரர்களால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் சேவையும், செயற்பாடுளுக்கும் நிகர், அவரேதான். இலங்கையிலிருந்து வெளிவந்த தேசிய பத்திரிகைகளில் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டு பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் ஆதார பூர்வமாக வெளிக்கொணர்ந்திருந்தார். அப்போது அவர் திருகோணமலையில் இடம்பெற்ற 5 மாணவர்களின் படுகொலைகள் தொடர்பில், ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்ந்திருந்தார்.

இந்நிலையில்தான் திருகோணமலை யில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு அருகில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

ஓர் நாட்டின் அபிவிருத்தியின் நான்கு தூண்களில் ஒரு தூணாக விளங்குவது ஊடகத்துறை. இவ்வாறான துறைசார்ந்த வர்களை நசுக்குவதும் படுகொலை செய்வதும் அச்சுறுத்துவதும் ஜனநாயக மீறல் மட்டுமல்ல, அது மனித உரிமை மீறலுமாகும். சுகிர்தராஜனின் படுகொலைக்கு எதிராக பல்வேறுபட்ட கோஷங்கள் எழுப்பப்பட்ட போதிலும் இன்றுவரை அதற்குரிய தீர்வு இல்லாமலேயே இருந்து வருகின்றது.

1969 டிசம்பர் 12ஆம் திகதி மட்டக் களப்பு - குறுமன்வெளியில் பிறந்த சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி திருகோணமலை உவர்மலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுகிர்தராஜனின் தந்தையார் சுப்பிரமணி யம், தாயார் அருள்ஞானம்மா. இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத் திலும், உயர்கல்வியை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு மத்திய கல்லூரி, என்பவற்றிலும் பயின்றார்.

பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர், 1997இல் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பணியில் சேர்ந்தார். திருகோணமலையில் இருந்து சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமை யாற்றிய சுகிர்தராஜன், வீரகேசரி, மெற்ரோ நியூஸ் ஆகியவற்றில் அரசியல் கட்டுரைகள் எழுதிவந்தார்.

வீரகேசரியில் எஸ்.எஸ்.ஆர்.மனோ, ரஹ்மான் ஆகிய பெயர்களிலும் மெற்ரோ நியூஸ் பத்திரிகையில் ஈழவன் என்ற பெயரிலும் அரசியல் விடயங்களை எழுதி வந்துவர்.

## 17ஆவது நினைவேந்தல்

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 17வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த செ வ்வாய்கிழமை (24.01.2023) மட்ட க்களப்பு காந்திப் பூங்காவில் அமைந்து ள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவு தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றின் இணை ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வு சிரேஸ்ட ஊடகவியலாளர் செ.பேரின்பராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன், மாநகரசபை உறுப்பினர்களான சி வம் பாக்கியநாதன், க.இராஜேந்திரன், சிவில் செயற்பாட்டாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸன், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவஅதிரன் உட்பட ஊட கவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, அமரர் சுகிர்தராஜனின் திருவுருவப் படத்திற்கு வருகை தந்தோர் அனைவராலும் மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் செயற்பாட் டாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸன், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல், ஆகியோரின் ஞாபகார்த்த உரைகளும் இடம்பெற்றன.

படுகொலை செய்யப்பட்ட ஊட கவியலாளர் எஸ்.சுகிர்தராஜன், பல்கலைக்கழக அனுமதிக்காக காத் திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் சடலங்களை சு கிர்தராஜன் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைகுண் டுத் தாக்குதலே காரணம் என்று பாதுகாப்பு தரப்பு விசாரணையை திசை திருப்ப முயற்சித்தபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக்காட்டின. இதனால், இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்கள் ஏற்பட்டன.

## ஊடகப் பணியை நேசித்த ஊடகன் சுகிர்தராஜன்

சுகிர்தராஜன் யுத்த சூழலிலும் துணிச்சலுடன் ஊடக பணியாற்றிய போதே 2006 ஜனவரி 24 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு குருமண்வெளியை பிறப்பிடமாகக் கொண்ட சுகிர்தராஜன் அம்பாறை வீரமுனையில் வசித்துவந்த நிலையில், திருகோணமையில் பணி நிமித்தம் தங்கியிருதார்.

கொல்லப்பட்ட தமிழ் ஊட கவியலாளர்களுக்காக சுதந்திர விசாரணை கள் நடத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஊடகவியலாளர்கள் ஆண்டாண்டு காலமாக கோஷங்கள் எழுப்பி வருகின்ற நிலையில், இது வரை எவ்வித விசாரணைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

உள்ளதை உள்ளபடி, தான்ச ார்ந்த ஊடகங்களின் வாயிலாக வெளி உலகிற்கு காண்பிப்பதற்காகத்தான் நன்கு பயிற்றப்பட்ட ஊடகவியலாளர்கள் களத்தில் நின்று செயற்படுகின்றார்கள். அது அவர்களுக்குக் கிடைக்கின்ற வேதனத்திலும் பார்க்க மக்கள் மீது கொண்டுள்ள அதீத கரிசனையும், பற்றுறுதியுமாகவே கொள்ள முடியும். ஆனாலும், இவ்வாறு மழை, வெயில், புயல், வெள்ளம், என பாராது தன்னலம் கருதாது பிறர் நலனுக்காக தினம் தினம் உழைத்துக் கொண்டிருக்கும் ம் ஊடகவியலாளர்களின் பேனாக்களை நசுக்க முனைவதென்பதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு நசுக்கப்பட்ட ஓர் ஊடக உறவுதான் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் .

எனவே, இனிமேலாவது நாட்டின் நாலாபாகமும் களத்தில் நின்று செயற்படுகின்ற ஊடகவியலார்களின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படாதவாறு அவர்களின் நலநோம்பு செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, படுகொலை செய்யப்பட்ட சு கிர்தராஜனின் குடும்பதினருக்கும், ஊட கத்துறைக்கும், நீதியைப் பெற்றுக்கொடு க்க துறைசார்ந்தவர்கள் முன்னிற்க வேண்டும் என்பதையே அவைரும் எதிர்பார்கின்றனர்.
















# ஜெஸிந்தா

## உலக அரசியலின் நாகரீக கனவான்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

எந்தவொரு விடயத்திலும் ஆர்வத்தைத் தந்து நின்று நிதானித்து உற்றுப் பார்க்கக் கூடியவற்றைப் பதிவு செய்வது சிறப்பான தாகும். அந்த வகையில் நியூசிலாந்து பிரதமர் ஜெஸிந்தா ஆர்டெர்னின் பதவி விலகல் முக்கியத்துவம் பெறுகிறது.

நமது நாட்டில் அசிங்கமான அரசியல் தலைமைகளை மக்கள் விரட்டியடித்துத் துரத்துமளவுக்கு அரசியல் அநாகரிகம் இடம் பெறும்போது, அங்கே நியூஸிலாந்தில் கண்ணியமாக மன நெகிழ்வை உண்டாக்கக் கூடியதாக ஒரு பெண் உலகத்துக்கே உதாரணமாகத் திகழ்கிறார்.

குறைந்த வயதில் ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பை அடைந்தவர் என்றும் உறுதியான உலகத் தலைவர்களின் வரிசையில் இடம்பிடித்தவர் என்றும் பாராட்டப்பட்ட நியூசிலாந்துப் பிரதமர் ஜெஸிந்தா ஆர்டெர்ன் வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பதாக தான் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்த விடயம் உலக அரங்கில் சிலாகித்துப் பேசுமளவுக்கு இப்பொழுது இடம்பிடித்துள்ளது. பிபிசி உட்பட உலக ஊடகங்களும் இந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அவர் அங்கத்துவம் வகித்து வழிநடத்திய தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகிக் கொள்ளும்பொழுது நாட்டின் பிரதமர் பதவியில் இருந்து அவர் விலகிக் கொண்டதாகிவிடும்.

நியூசிலாந்தில் வரும் ஒக்ரோபெர் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்து பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் இருந்து பல்லாயிரம் மைல்கள் தொலைவில் குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடாக இருக்கலாம், ஆனால் அது பெரும்பாலும் உலகளவில் ஒரு தடத்தைச் சுடர்விட்டுள்ளது. உதாரணமாக, 1890 களில், அனைத்து பெண்களும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற முதல் நாடு இதுவாகும்.

42 வயதான ஜெஸிந்தா தான் பதவி விலகிக் கொள்ளும் அறிவிப்பின்போது ‘‘இதற்குமேல் தன்னிடம் தலைமைப் பொறுப்புக்கான ஆற்றல் இல்லை’’ என்று அவர் பவ்வியமாகத் தெரிவித்துள்ளார். தான் பணியில் இருந்தபோது எதிர்கொண்ட ஆறு சவாலான ஆண்டுகள், அவை எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தின என்பதை விவரிக்கும்போது ஜெஸிந்தா சற்றுத் தடுமாறினார் என்று பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெஸிந்தா 2017ஆம் ஆண்டு தனது 37வது வயதில் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது உயரிய பதவியைப் பெற்ற உலகின் இளைய பெண் தலைவர் என்று அறியப்பட்டார். அதன் பின்னரும் பல நிகழ்வுகளால் ஜெஸிந்தா உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டார்.



ஒரு வருடம் கழித்து, அவர் குழந்தை பெற்றுக்கொண்டபோது, பதவியில் இருக்கும்போது குழந்தை பெற்றுகொண்ட இரண்டாவது பெண் தலைவர் என்ற சிறப்பையும் அவர் பெற்றார்.

அவ்வேளையில், அமெரிக்க - நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் தனது குழந்தையுடன் அவர் பங்கேற்றார். அதுவே, அவரது வலுவான பெண்ணியக் கருத்துக்களுடன் சேர்ந்து, உலகளாவிய ட்ரம்ப் எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு முக்கிய நபராக அவரை மாற்ற போதுமானதாக இருந்தது.

கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதன் பின்னான மந்தநிலை, கிறிஸ்ட்சர்ச் மசூதி துப்பாக்கிச் சூடு மற்றும் வைற் ஐலண்ட் எரிமலை வெடிப்பு என கடுமையான சூழல்களுக்கு மத்தியில் ஜெஸிந்தா நியூசிலாந்தை வழி நடத்தினார்.

இந்த நிகழ்வுகள் தனது பதவிக் காலத்தில் கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியது என்று பதவி விலகப் போகும் ஜெஸிந்தா தெரிவித்துள்ளார்.

ஜெஸிந்தா ஆர்டெர்ன் 2020இல் தொழிலாளர் கட்சியின் மகத்தான தேர்தல் வெற்றிக்கு உழைத்து வழி நடத்தினார்.

‘‘நான் பதவியில் மேலும் தொடர்ந்தால் அது நியூசிலாந்துக்கு செய்யும் அவமதிப்பு’’ என்று ஜெஸிந்தா செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

மேலும், ‘‘அமைதியான சூழலுக்கு மத்தியில் நாட்டை வழி நடத்துவது என்று ஒன்று உண்டு. மற்றொன்று கடுமையான சூழலுக்கு மத்தியில் வழி நடத்துவது’’ என்று அவர் கூறியுள்ளார்.

## உலக அரங்கில் கனவான் அரசியலைக் காட்டிய நியூஸிலாந்து முன்னாள் பிரதமர் ஜெஸிந்தா

‘‘இந்த சவாலை தாங்க நமக்கு புதிய தோள்கள் தேவை’’ எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

‘‘மக்கள் தன்னை, எப்போதும் அன்பாக இருக்க முயற்சிக்கும் ஒருவராக நினைவில் கொள்வார்கள்’’ என்று தான் நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

‘‘நீங்கள் கனிவாகவும் வலிமையாகவும் பச்சாதாபமாகவும் தீர்க்கமாகவும் நம்பிக்கையுடனும் கவனம் செலுத்தக்கூடியவராகவும் இருக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் நியூசிலாந்தின் தலைமைப் பொறுப்பை விட்டுச் செல்கிறேன் என்று நம்புகிறேன்.

மேலும், எப்போது செல்ல வேண்டும் என்பதை அறிந்தவர், சிறந்த தலைவராக இருக்க முடியும்’’ என்றும் ஜெஸிந்தா குறிப்பிட்டுள்ளார்.

ஜெஸிந்தா காலநிலை மாற்றம், சமூக வீட்டுவசதி மற்றும் குழந்தைகளின் வறுமையைக் குறைத்தல் தொடர்பாக தனது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை, தான் பெருமைப்படக்கூடிய சாதனைகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெஸிந்தாவின் பதவி விலகல் அறிவிப்பைக் கேட்டு அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், புத்திசாலித்தனம், வலிமை மற்றும் இரக்க குணம் உடைய தலைவர் என்று ஜெஸிந்தாவைப் பாராடியுள்ளார்.

‘‘ஜெஸிந்தா நியூசிலாந்திற்காக தீவிரமாக குரல் கொடுப்பவராகவும் பலருக்கு உத்வேகமாகவும் எனக்கு சிறந்த நண்பராகவும் இருந்து வருகிறார்’’ என்று அவர் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதர் ஜெஸிந்தாவின் குறைபாடற்ற தலைமைத்துவமும் கிறிஸ்ற் சர்ச் மசூதி படுகொலைகளுக்குப் பிறகு ஒவ்வொரு நியூசிலாந்தரின் கூட்டுப் பிரதிபலிப்பும் முஸ்லீம் உலகையும் வியப்பில் ஆழ்த்தத் தவறவில்லை.

நியுஸிலாந்து மசூதியில் 50 பேரைக் கொன்ற முஸ்லிம்கள் மீதான இனவெறிப் படுகொலையின் பின்னர் ஜெஸிந்தா அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ‘‘அவர்கள் நாமே’’ என்று முஸ்லிம்களைக் குறிப்பிட்டு தனது உரையில் முஸ்லிம் சமூகத்துடனான நேர்மையையும் இரக்கத்தையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தியிருந்தார்.

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...



# கத்தார் தமிழர் சங்க தேர்தலில் போட்டியிடும் யாழினி குமார்










தமிழரின் கலை கலாசாரங்களை தமிழர் எங்கு இருந்தாலும் பேணும் வகையில் கத்தாரில் இயங்கி வரும் கத்தர் தமிழர் சங்கத்தின் மேலான்மைக் குழு உறுப்பினராக (2023-2024) பணியாற்ற வாய்ப்பு கேட்டு தேர்தலில் நிற்கிறார்.

கத்தாரில் பல்வேறு தமிழர் கலாசார நிகழ்வுகளுக்கு உந்து சக்தியாக இருப்பதில் திருப்தி காணும் கொடையாளர் Yalini Healthy Greens நிறுவனத்தின் தலைவர் குமார் லெட்சுமணன் (யாழினி குமார்) இந்த தேர்தலில் போட்டியிடுகின்றார்.

ICC and ICBF உறுப்பினராகவும் பல வருடங்களாக சேவைகள் செய்து வருகின்றார்.

தமிழகத்தின் கங்கை கொண்ட சோழபுரத்தை சேர்ந்த யாழினி குமார் இவர் கத்தாரில் தொழில் நிமர்த்தம் வசித்தாலும் தனது தாய் நாட்டிலும் பல்வேறு சமூகப் பணிகளுக்கு கொடையாளராக காணப்படுகின்றார்.

சுறுசுறுப்பும் விவேகமும் கொண்ட இவர் கத்தாரில் இடம்பெறும் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளுக்கு முக்கிய மூலகர்த்தாவாகவும் இயங்கி வருகிறார்.

கடந்த வருடம் இவரும் இவரது நண்பர்களின் கூட்டு முயற்சியில் கத்தார் ஒருங்கிணைந்த தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் கலாசார சங்கமம் நிகழ்வு மிகவும் பிரம்மாண்டமாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக் கதாகும்.

கத்தாரில் தொழில் ரீதியாக மேற்கொள்ளும் விடயங் களும் தமிழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவே காணப் படுகின்றது.



நாட்டு மரசெக்கு எண்ணெயை கத்தர் நாட்டுக்கு முதல் முதாலாக அறிமுகம் செய்த பெருமை இவரின் யாழினி நிறுவனைத்தையே சாரும்.

தமிழ்நாட்டு காய்கறிகளை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து தமிழ் மக்கள் தேவைகளை பூர்த்திசெய்தவர் கடந்த இரண்டு வருடங்களாக கத்தார் நாட்டில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை கொண்டாட தேவையான அனைத்து பொருட்களையும் தமிழ்நாட்டில் இருந்து இறக்குமதி செய்து வீடு வீடாக வினியோகம் செய்தவர் திரு. யாழினிகுமார் என்பதும் குறிப்பிடதக்கது.

அத்துடன் தமிழகத்தில் நன்மதிப்பைப் பெற்ற காளிமார்க் குளிர்பானங்களளை இவரது Yalini Healthy Greens நிறுவனத்தின் ஊடாக கத்தாரில் விநியோகித்து வருகின்றார்.

இவ்வாறு தொழில் ரீதியிலும் சமூக சேவையிலும் பல்வேறு முன்மாதிரியான செயல்பாடுகளை முன்னெடுத்து வரும் யாழினி குமார் கத்தர் தமிழர் சங்க தேர்தலில் மேலான்மைக் குழு உறுப்பினராக பணியாற்ற வாய்ப்பு கேட்டு தேர்தலில் நிற்கின்றார்.



இளம் கலைஞர் அறிமுகம்
கு. கிலசன்

# பல்துறைகளில் கால்பதித்த துடிப்பான றுத்ரா



கிழக்கு மாகாணத்தில் களுவாஞ்சிக்குடி கிராம சேவகர் பிரிவில் களுதாவளை என்னும் ஊரில் பிறந்தவரே அமிர்தெரத்தினம் றுத்றா.

இவரது தாய் திருமதி. ரதி அமிர்தெரத்தினம் பெரியகல்லாறு மெ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வருவதுடன் இவரது தந்தை இவர் சிறு வயதிலேயே இறைபதம் அடைந்து விட்டார்.

களனி பல்கலைக்கழகத்தில் புவியியல் விஷேட பிரிவில் படித்து வரும் இவர் ஆரம்ப கல்வியை கிரான்குளம் விநாயகர் வித்தியாலயத்திலும், இடை நிலை கல்வியை களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும், இறுதியாக உயர்கல்வியை களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையிலும் பயின்றதுடன் இலக்கியம், நடனம், சொற்பொழிவு என பல்வேறு துறைகளில் தனது திறமைகளை காட்டி வரும் இவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டவர்.



பக்தி பூர்வமான குடும்பத்தில் பிறந்த இவர் தனது 9 வயது முதல் ஆலயங்களில் இடம்பெறும் கூத்துகள், நடனங்கள், பண்ணிசை, சைவ வினா விடை போட்டிகளிலும் பங்கு பற்றி தனது திறமைகளை வெளிக்காட்டி வந்துள்ளார்.

மட்டக்களப்பு பாரம்பரியத்தின் கூத்து, பறை (தப்பாட்டம்) போன்ற மருவி வரும் கலைகளை தன்னால் இயன்றளவு பயின்று வெளிப்படுத்தி வருகிறார். அதுமட்டுமின்றி இலங்கையில் பல ஆலயங்களில் ஆன்மீக சொற்பொழிவுகளிலும், கதாப்பிரசங்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவருக்கு நடிப்பு துறையிலும் ஆர்வம் விட்டுவைக்கவில்லை. அதன் பயனாக ‘எனக்குள்ளே’ என்ற குறும்படத்தில் நடித்ததன் மூலம் சினிமாத் துறைக்குள் பிரவேசித்தார்.

இவரை சினிமாத்துறைக்குள் அறிமுகம் செய்தவர் குறுந்திரை செம்மல் கோடீஸ்வரன் அவர்கள்தான் என்பதை நன்றியுடன் நினைவு கூறுகிறார்.

இதனை தொடர்ந்து ‘போடியார்’, ‘சங்காரம்’, ‘ஒமேகா’ போன்ற குறும்படங்களிலும் நடித்துள்ளார்.

*Ruthra's Diary* என்னும் வலையொளி பக்கத்தையும் வைத்திருக்கும் இவர் சமூக பணிகளிலும், விவசாயத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்.

சாதாரண தரத்தின் பின்னர் கொழும்பில் நடனக் கலைகளான பரதம், குச்சுக்கடி, கதக் மற்றும் இசை போன்றவற்றையும் முறைப்படி கற்றறிந்தார். இந்தியாவின் கேரளாவை சேர்ந்த விபித்தா விஷ்மயா அவர்களே இவருடைய குரு ஆவார்.

களுவாஞ்சிக்குடி *Cooperative Board of Director* உறுப்பினராகவும் விவசாய அமைப்பில் விவசாய விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு தலைவியாகவும் *Battimedia* வில் ஊடகவியலாளராகவும் பணியாற்றுவதுடன் சமூக வலைத் தளங்களில் சிறு கதைகள் எழுதி வரும் இவர் ‘வெள்ளிடி‘ என்னும் நாவலை மிக விரைவில் வெளியிட உள்ளார்.

இவரது இலட்சியம் மட்டக்களப்பு அரசாங்க அதிபராகி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதாகும். றுத்றாவின் தாயாரும், நண்பர்களும், சொந்தங்களும் அனைத்து விடையத்திலும் ஊக்குவிப்பாகவும் பக்க பலமாகவும் உள்ளத்துடன் மட்டக்களப்பின் பண்டைய பாரம்பரிய கலைகளையும் தொன்மையினையும் இயன்றளவு பாதுகாப்பதும் மட்டக்களப்பு மக்களுக்கு சேவையாற்றுவதுமே தனது கனவு என அந்த கனவுகளை எட்டும் முயற்சியில் ஓடிக்கொண்டிருக்கும் இளம் பெண் றுத்றாவுக்கு யாவும் வெற்றிகாண எமது வாழ்த்துகள்.





# எழுத்து துறையில் மிளிரும் மாவடிப்பள்ளி மஜினா

அம்பாரை மாவட்டத்தில் மாவடிப் பள்ளி உமறு லெவ்வை மற்றும் எஸ்.ஐ.உம்மு சல்மா ஆகியோரின் புதல்வியான யூ.எல்.யூ. மஜினா ஆரம்ப கல்வியை மாவடிப்பள்ளி அல் அஷ்ரஃப் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலும் வெளிவாரியாக பட்டப் படிப்பு கற்கையினை பேராதனை பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டார்.

கட்டாரில் இயங்கும் துணிந்தெழு சஞ்சிகையில் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் பயணிக்கும் இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே கவிதை, சிறுகதை, சிறுவர் கதை நாடகங்கள், பாடலாக்கம், விவாதம் என பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளார். இவர் எழுதிய ஆக்கங்கள் பிரதேச இலக்கிய போட்டிகளில் பிரதேச ரீதியில் முதலாமிடங்களைப் பெற்றதுடன் மாவட்ட ரீதியிலும் தேர்வாகி கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் விருது 2021ல் வழங்கப்பட்டது. இதைவிட “கவிமணிசுடர்” விருது என பல விருதுகளை வென்றுள்ளார். இவரது ஆக்கங்கள் பல பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் இடம்பிடித்துள்ளன.

மேலும் தினகரனில் செந்தூரம் பகுதியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்களை அறிமுகம் செய்தும் வருகிறார். இந்தியாவில் தமிழகம் முழுவதும் வெளிவரும் விடியல் இலக்கிய இதழில் இந்திய பெண் எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்து வருகிறார். இந்தியாவில் வெளியிடப்பட்ட “இங்காவின் ஆலாபனைகள்” எனும் நூலில் இவரது ஹைக்கூக்களும் இலங்கையில் வெளியிடப்பட்ட “சுட்டு விரல்” எனும் நூலில் இவரது கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இவரது எழுத்துக்கள் தன்னம்பிக்கை நிறைந்த வரிகள், உள்ளத்திற்கு ஆறுதல் கொடுக்கும் வரிகள், மாற்றுத் திறனாளிகள் அனுபவிக்கும் சோகங்கள், சமூகத்தின் தேவை, அவலங்களை சமூக அக்கறையுடன் சமூகத்திலுள்ள குறைநிறைகளை எழுத்துக்களினூடாக எழுதி வருகிறார்.

இவரது இலக்கியப்பயணத்தில் சிறந்த படைப்புக்களை சமூகத்திற்கு வழங்கி உயர்ந்து நிற்க வாழ்த்துகள்.



# யோக ஆசனங்களின் மகிமை

கலாபூசணம்
யோகாசன கலாநிதி கா.சந்திரலிங்கம்

## அர்த்த மத்ஸ்யேந்திர ஆசனம்

### (உடலை அரைவாசிப் பக்கம் முறுக்கும் தோற்றம்)



இவ்வாசனத்தை உலகுக்கு கொடுத்த மகாமுனிவரான மத்ஸ்யேந்திரா என்பவரின் பெயரால் இவ்வாசனம் அழைக்கப்படுகிறது.

இவ்வாசனத்தை முழுமையாக செய்வது கஷ்டம் என்பதனால் அரைவாசியாக இது செய்யப்படுகின்றது. "அர்த்த" என்னும் சமஸ்கிருத சொல் பாதி என்பதை குறிக்கும்.

**செய்முறை:**

கால்களை முன் பக்கம் நீட்டி உட்காருக. வலது காலை மடக்கி இடது தொடையின் கீழ்ப்பக்கமாக அடிப்பாகத்தில் வலது காலின் பாதத்தை வைக்கவும். பாதத்தின் வளைவுப் பகுதி அடித்தொடையோடு இணைந்தது போல் இருக்க வேண்டும்.

இது கால்களை நழுவ விடாமல் பிடித்துக் கொள்ளும். இடது காலை மடித்து வலது கால் தொடையில் வெளிப்பகுதியில் வைக்கவும். இடது காலின் பாதம் தரையில் படுதல் வேண்டும். வலது கையை மேலே தூக்கி உடலை இடது பக்கம் திருப்பி வலது கையை பதித்து இடது காலின் வெளிப்பக்கமாக கொண்டு வந்து இடது காலின் பெருவிரலை பிடிக்கவும்.

முடியாதவர்கள் கணுக் காலை பிடிக்கவும் இடது கையை முதுகின் பின்பக்கமாக கொண்டு வந்து வலது இடுப்பு பகுதியை முடிந்த அளவு பிடிக்கவும். புறங்கை இடுப்பு பகுதியில் பட்டிருக்கும்.

உடலையும் தலையையும் இடது பக்கம் எவ்வளவு திருப்ப முடியுமோ அவ்வளவு திருப்பி உடலை நன்கு முறுக்கவும். மெதுவாக சுவாசிக்கவும். இந்நிலையில் ஒரு நிமிடம் இருந்தால் போதுமானது. இதேபோன்று மறுபக்கமும் கட்டாயமாக செய்யவும்.

**இதன் பலன்கள்:**

உடல் நன்கு முறுக்கப் படுவதால் முதுகுப் பகுதியில் நரம்பு மண்டலங்கள் புத்துணர்ச்சி அடைந்து புது தென்பைப் பெறுகின்றது.

கல்லீரல், மண்ணீரல் தூண்டப்படுகின்றன. கல்லீரலில் வீக்கம் இருந்தால் அகற்றப்படும். பயங்கிரியாஸ் நன்கு தூண்டப்பட்டு இன்சுலின் சிறந்த முறையில் சுரக்கப் படுவதால் நீரிழிவு வியாதி கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாசனத்தை தொடர்ந்து செய்தால் நீரிழிவு நோயை முழுமையாக குணப்படுத்தலாம். "முதுகை முறுக்க முதுமை மறையும்" என்று சொல்வார்கள்.

சிறுநீரகக் கோளாறு, அடி முதுகு தோள்களில் ஏற்படும் வலி போன்றவை அகற்றப்படுவதோடு வயிற்றிலுள்ள கொழுப்பு கரைக்கப்படுகின்றது.

சாமிபாட்டுக் குறைபாடு அகலும்.இவ் வாசனத்தை காலையில் செய்தால் நாள் முழுவதும் உற்சாகமாக இருக்கலாம்.

**விலக்க வேண்டியவர்கள்:**

வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தவர்கள் ஆண்மை அறுவை சிகிச்சை செய்தவர்கள் இவ் வாசனத்தைத் தவிர்க்கவும்.

## வக்ராசனம்

உடலை முறுக்குவதன் ஊடாக ஆரோக்கியத்தை பெறும் ஆசனம்.



**செய்முறை:**

தரையில் விரிப்பில் உட்கார்ந்து இரண்டு கால்களையும் நீட்டவும். வலது காலை மடக்கி இடது முழங்கால் மூட்டுக் கருகில் கொண்டு வரவும்.

இடது கையை தூக்கி மடிக்கப் பட்டிருக்கும் வலது காலின் கட்டைவிரலை பிடிக்கவும். வலது கையை பின்னால் கொண்டு சென்று வலது பக்கம் தரையில் உள்ளங் கைகளை ஊன்றிக் கொள்ளவும். வலது பக்கம் உடலை முடிந்த அளவு நன்கு திருப்பி முறுக்கவும்.

மெதுவாக சுவாசிக்கவும் இந்நிலையில் ஒரு நிமிடம் இருந்தால் போதுமானது. இதே போன்று மறுபக்கமும் செய்யவும்.ஒரு பக்கம் செய்தால் மறுபக்கமும் கட்டாயம் செய்ய வேண்டும்.

**பலன்கள்:**


அர்த்த மத்ஸ்யேந்திராசனத்துக்குரிய அனைத்துப் பலன்களும் இதற்கும் கிடைக்கும். முதுகெலும்பில் உள்ள அனைத்து நரம்புகளும் புத்துணர்ச்சி பெறும். எப்பொழுதும் உற்சாகமாக இருக்கலாம். கூன் விழாமல் தடுக்கும்.

**தவிர்க்க வேண்டியவர்கள்:**

ஆண்மை, வயிற்றுப் பகுதியில் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள் இவ் வாசனம் செய்வதைத் தவிர்க்கவும்.

## மயூராசனம்

மயூர் என்றால் வடமொழியில் மயில் என்று பொருள். இந்த ஆசனத்தின் உச்ச நிலை மயில் நிற்பது போன்று காணப்படுவதால் இது மயூராசனம் என்று பெயர் பெற்றது மயில் போன்ற தோற்றம் உடைய ஆசனம்.



**செயல்முறை:**

ஹம்சாசனம் செய்வது போன்று செய்யவும். இரண்டு கால்களின் விரல்கள் தரையில் படாதவாறு தூக்கவும்.

உடலின் முழுப் பாரத்தையும் கைகள் இரண்டுக்கும் கொடுத்து உடலை சம நிலையில் வைத்து முழங்கைகள் இரண்டிலும் உடலை நிறுத்தவும்.

முகம் பூமியில் விழுந்து விடாதபடி சம நிலையை பேணவும்.

சாதாரணமாக சுவாசிக்கவும். இவ்வாசனத்தை ஒரு நிமிடம் செய்தால் போதுமானது.

**பலன்கள்:**

தொப்பை குறையும். வயிற்றின் உள்ளுறுப்புகளான இரைப்பை, கணையம், பித்தப்பை, சிறுகுடல், பெருங்குடல் போன்றவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

மலச்சிக்கல், அஜீரணம் என்பவற்றைப் போக்கும். நீரிழிவு நோய் வராமல் தடுக்கும். வாய்வுத் தொல்லை அகலும். வயிற்றிலுள்ள தசையின் கொழுப்புகளை நீக்கும்.

## சுப்த வஜ்ராசனம்

சுப்த என்பது படுத்தல் என பொருள்படும். படுத்து செய்யும் வஜ்ராசனம் என இதனை கூறலாம்.



**செயல்முறை:**

முதலில் வஜ்ராசனம் செய்யவும். குதிகால்களை சற்று அகட்டி பிருஷ்ட பாகம் தரையில் படும்படியாக வைத்துக் கொள்ளவும். பின்பு கைகள் இரண்டையும் பின்னால் கொண்டு வந்து, இரண்டு கைகளின் உதவியுடன் உடலை பின்னால் சரித்து மெதுவாக விரிப்பில் படுக்கவும். இடுப்போடு இணைந்து மேற்பகுதி உடம்பு அனைத்தும் தரையில் பதிந்தவாறு இருக்க வேண்டும்.

இரண்டு கைகளையும் தலைக்கு பின்னால் வைத்துக் கொள்ளவும். கைகளை நீட்டியவாறும் வைத்துக் கொள்ளலாம்.

நன்கு மூச்சை உள்ளி முத்து வெளி விடவும். முடிந்த அளவு நேரம் ஆசனத்தில் இருக்கவும்.

ஆசனம் செய்து முடிந்ததும் மெதுவாக இரு கைகளின் உதவியுடன் எவ்வாறு பின்னால் உடலை சரித்துக் கொண்டு சென்றீர்களோ அவ்வாறே மெதுவாக வஜ்ராசனத்துக்கு வரவும்.இரண்டு கால்களையும் வஜ்ராசன முடிவில் கொண்டு வந்தது போன்று வெளியில் கொண்டு வந்து இரு கால்களையும் நீட்டி ஓய்வெடுத்துக் கொள்ளவும்.புறங்கால்களையும் கணுக் கால்களையும் கசக்கிவிடவும்.

**பலன்கள்:**

இடுப்பு பகுதியை நன்றாக இயங்க வைக்கும். கால்களின் பின்புற மாகச் செல்லும் நரம்புகளை ஊக்குவிக்கின்றது. தொடர்ந்து நின்று வேலை செய்பவர்களின் அசதியை இல்லாமல் செய்கின்றது. ஆசனத்தின் போது ஆழ்ந்து மூச்சை உள்ளெழுத்து வெளி விடுவதால் சுவாசப்பையோடு சம்பந்தப்பட்ட நோய்கள் தீர்க்கப்படுகின்றன.


# காதலின் சின்னமான கடலோர நகரம்


# மவுண்ட் லவனியா



**சரித்திரப் பார்வை**

**சஞ்சீவி சிவகுமார்**




**சஞ்சீவி சிவகுமார்**

கடலோர நகரமான கல்கிசை ஆங்கிலத்தில் மவுண்ட் லவனியா என அழைக்கப்படுவது நாம் அறிந்ததே. இதன் பெயரீடு சுவாரசியமிக்க வரலாறைக் கொண்டமைத்ததாகும்.

சேர்.தோமஸ் மெயிட்லண்ட் அவர்கள் 1805-1811 வரையான ஆறு ஆண்டுகள் பணியாற்றிய பிரித்தானிய இலங்கையில் இரண்டாவது தேசாதிபதி ஆவார். தோமஸ் மெயிட்லண்ட் அவர்களே 1805இல் தாம் பிரித்தானிய அரச செயலாளரான *(British State Secretary)* காசில் றீவ் பிரபுக்கு எழுதிய கடிதத்தில் *Mt. Laviniya, Ceylon* என்பதை முதன்முதலில் அலுவல் முறையில் பயன்படுத்தினார்.


தோமஸ் மெயிட்லண்ட் தேசாதிபதியாக அரசாட்சியை ஏற்ற காலம் இலங்கை பல்வேறு சமூக, அரசியல் சிக்கல்களைக் கொண்ட காலமாக அமைந்திருந்தது. முதலாவது தேசாதிபதியான பிரடிக்ட் நொத்தின் கண்டி மீதான படையெடுப்பு மிகப்பெரிய தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்தே சேர்.தோமஸ் மெயிட்லாண்ட் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். ஆயினும் இவரது துணிகரமான மாற்றங்களும் சில இடங்களில் காட்டிய நிதானமும் சிறப்பான ஆட்சி ஒன்றுக்கு வழிகோலியது.

மெயிட்லாண்ட் தேசாதிபதியாகப் பதவியேற்று இலங்கை வந்தபோது நடைபெற்ற வரவேற்பு விழாவில் நிகழ்ந்த மெட்டிஸோ நடன நிகழ்வொன்றில் லொவின்னா அல்போன்சா எனும் பெண் முதன்மை நடனக்காரியாக இருந்தார். லொவின்னா பதினாறு வயது கொண்ட சிங்களத் தாய்க்கும் போர்த்துக்கேயத் தந்தைக்கும் பிறந்த "றோடியா" எனப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண். அவரது தந்தையே இந்த நடனக் குழுவையும் இயக்கி வந்தார்.



இலங்கையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பான றோடியா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணிய தடை காணப்பட்ட காலம். அன்றைய சமூகத்தின் அடிமைகளாக அவர்கள் காணப்பட்டனர். திறந்த மார்புடன் நடனமாடி உயர்வர்க்கத்தினரை மகிழ்ச்சிப்படுத்துவதாக இந்த நடனக்குழு பிரபலப்பட்டிருந்தது.

நடனக் குழுவின் முன்னணி நாட்டியக்காரியான லொவின்னாவின்துருதுருவிழிகளில்தன் உள்ளத்தைப்பறிகொடுத்தார் தோமஸ் மெயிட்லாண்ட். தோமஸ் மெயிட்லாண்ட் அவர்கள் தனது 45 வயதில் இலங்கைக்கு வருகிறார். அதுவரைக் கட்டப் பிரம்மச்சாரியாக இருந்த மெயிட்லாண்ட் லொவின்னாவிடம் காதலில் வீழ்ந்தார்.




1806களில் கல்கிசைப் பகுதியில் தேசாதிபதிக்கான பிரத்தியேக வதிவிடம் ஒன்றை அமைக்க தோமஸ் மெயிட்லாண்ட் தீர்மானித்தார். அதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு வாங்கப்பட்டது. அந்த இடம் லொவின்னா வசித்த குப்பத்திற்கு அருகாக அமைந்திருந்தது. முதிரை, தேக்கு ஆகிய மரங்களைக் கொண்டமைந்த ஆடம்பர மாளிகையாக அது அமைக்கப்பட்டது.

தேசாதிபதிகள் பொதுமக்களை சந்திப்பது அக்காலத்தில் நடைமுறையாக இருக்கவில்லை. பலதட்டு காவல்களைக் கடந்தே தேசாதிபதிகளை அணுகமுடியும். இதனால் மெயிட்லண்ட் நேரடியாக லொவின்னாவை சந்திக்க விரும்பவில்லை. அதுவும் இலங்கையில் தாழ்ந்த சாதி எனக் கருதப்படும் பெண்ணுடன் இருந்த நெருக்கத்தை வெளிப்படையாக வெளியிடுவதில் மெயிட்லாண்டுக்கு பிரச்சினை இருந்தது.

மெயிட்லாண்ட் புதிதாக நிருமாணிக்கப்பட்ட தனது பிரத்தியேக வதிவிடத்தில் தான் லொவின்னாவை சந்திப்பதற்கான இரகசிய நிலவடிச் சுரங்கப்பாதை ஒன்றை நிருமானித்தார். தேசாதிபதியின் மாளிகையில் இருந்து லொவின்னா குடியிருந்த வீட்டின் கிணற்றடி வரைச் செல்லும் வகையிலான அந்தச் சுரங்கப்பாதை இரகசியமாக கட்டிடக் கலைஞர் ஒருவரின் மூலம் அமைக்கப்பட்டது. இந்தப்பாதை ஊடாக லொவின்னா தேசாதிபதி மாளிகைக்கு சென்றுவர முடிந்தது. தேசாதிபதி மாளிகையில் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

தேசாதிபதிக்கும் லொவின்னாவுக்கும் இடையிலான இந்தக் காதல் தொடர்பு படிப்படியாக வெளியில் கசியத் தொடங்கியது. பிரித்தானிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையின் அதி உச்சப் பதவியில் உள்ள ஒருவர் ஒரு தாழ்த்தப்பட்ட ஒரு பெண்ணைக் காதலிப்பதும் அவளுக்காக அரச சொத்துக்கள் வீண் விரையம் செய்யப்படுவதுமான செய்தி பிரித்தானிய மன்னரான மூன்றாம் ஜோர்ஜ் வரைச் சென்றது. இதன் விளைவாக மெயிட்லண்ட் பிரித்தானியாவுக்கு உடனடியாகத் திருப்பி அழைக்கப்பட்டார். மீண்டும் வந்து அழைத்துச் செல்வேன் என்ற உறுதிமொழியுடன் லொவின்னாவைப் பிரிந்தார் மெயிட்லண்ட்.

அதன் பின் 1811 பெனின்சுலா சண்டையில் பிரதானியாக மெயிட்லண்ட் அனுப்பப்பட்டார். பின் 1813களில் மோல்டோ நாட்டின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். லொவின்னா, காதல் பிரிவு தாங்க முடியாமல் கடலில் பாய்ந்து இறந்ததாகக் கூறப்படுகின்றது. தோமஸ் மெயிட்லண்ட் திருமணம் செய்துகொள்ளவில்லை. தனது 63ஆவது வயதில் இறந்தார்.

தோமஸ் மெயிட்லண்ட்- லொவின்னா காதலின் சின்னமான இந்த மாளிகை லவனியா மாளிகை என அழைக்கப்பட்டது (லொவின்னா என்ற பெயர் லவனியா என உச்சரிக்கப்பட்டது) பின் இராணுவ வைத்தியசாலையாக செயற்பட்டது. தோமஸ் மெயிட்லண்டுக்குப் பின் தேசாதிபதிகளாக இருந்த றொபர்ட் பிரவுன்ரிக், எட்வெர்ட் பார்ன்ஸ் ஆகியோர் இதில் வசித்துள்ளனர். 1947இல் ஹொட்டல் மவுண்ட் லவனியாவாகியது.

காதலின் சின்னமாக ஒரு மாளிகையை மட்டுமல்லாது நகரையே தந்த அந்தக் காதல் வாழ்க.



# பொன் விழா காணும் கோவிலூர் செல்வராஜன்

## உலகறிந்த பன்முக படைப்பாளி

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் தென்பகுதியில் அமைந்திருக்கின்ற அழகிய கிராமம் திருக்கோவில் என்னும் கிராமம். (இப்போது அம்பாறை மாவட்டம்) இந்த கிராமத்தில்தான் மட்டக்களப்பின் முதலாவது திருப்படைக் கோவிலான ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் அமைந்திருக்கிறது.

இந்த சீர்மேவும் திருக்கோவில் பதியில்தான் திரு.கோவிலூர் செல்வராஜன் பிறந்தார். இவரது இயற்பெயர் இராசையா செல்வராஜன். திரு.இராசையா அவர்களுக்கும் திருமதி அழகம்மா அவர்களுக்கும் மகனாக 18.09.1952 அன்று இவர் பிறந்தார்.

இவர் தந்தை ஒரு விவசாயி, வியாபாரி. இவருக்கு இரண்டு மூத்த சகோதரிகளும் ஒரு மூத்த சகோதரனும் ஒரு இளைய சகோதரனும் உடன்பிறப்புகளாக இருந்தார்கள். ஆனால் இப்போது இருப்பது ஒரே ஒரு இளைய சகோதரன் மட்டுமே. இவரது பெற்றோரும் ஏனைய மூன்று உடன்பிறப்புகளும் அமரர்களாகிவிட்டனர்.

இவர் தனது சிறு வயதிலிருந்து இவரது சின்னம்மா தனலெட்சுமி ஏகாம்பரம் அவர்களிடமே வளர்ந்து வந்தார். தம்பிப்போடி ஏகாம்பரம் அவர்கள் இவரது பாட்டனார். அவர் சிறந்த கல்வியாளர். தம்பிலுவில் கிராமத்தில் இருந்த பெரிய மேட்டுக்குடியை சேர்ந்தவர். அவருக்கு புராண, இதிகாசங்கள் எல்லாம் நன்கு தெரியும். அதனால் அவரது மகள் தனலெட்சுமிக்கும் அவை அத்துப்படி. இந்த பின்புலத்தில்தான் திரு.செல்வராஜன் அவர்கள் வளர்ந்து வந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை இவர் திருக்கோவில் மெதடிஸ்த மிசன் பாடசாலையில் கற்றார். அதன்பின்னர் கல்வி பொதுத் தராதரம் வரை தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் கற்றார். (இப்போது அது கல்லூரி) தனது உயர்தரக் கல்வியை மட்டக்களப்பில் கற்று தேர்ந்தார். அதன்பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் தேர்வு நாடியாக இருந்து பட்டம் பெற்றார். இது இவரது பிறப்பும் குடும்ப பின்னணியும் கல்வி சார்ந்த கவல்களுமாகும்.

இனி இவரது கலைச் சிறப்புகள் பற்றி சற்று விரிவாக ஆராய்வோம்.

திரு.கோவிலூர் செல்வராஜன் அவர்கள் இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பன்முக கலைஞர் என்று அறியப்பட்டு இருகின்றார் என்றால் அதற்கு காரணம் அவரது கடின உழைப்பும் அந்த உழைப்புக்கு பின்னால் உள்ள பலரின் பங்களிப்பும் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிறுவயதிலிருந்தே இவருக்கு தமிழிலும் தமிழ் கலைகளிலும் அதித ஆர்வம் இருந்தது. பள்ளியில் படிக்கும்போதே பாட்டு,பேச்சு,நாடகம் என்று மிகுந்த ஈடுபாட்டுடன்தான் இருந்தார். திருக்கோவில் முருகன் ஆலயத்தில் உற்சவ காலங்களில் நிகழ்சிகள் செய்யும் இவரது உறவினர்களோடு சேர்ந்து தானும் பங்கேற்பது. அவர்களோடு சேர்ந்து நாடகங்கள் நடிப்பது திரைப்படங்கள் பார்ப்பது. அந்த திரைப் படங்கள் பற்றி விமர்சனம் செய்வது என்று இருந்த இவர்,திருகோவிலில் உதயசூரியன் கலாமன்றம் என்ற கலை மன்றம் உருவானபோது அதில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு அதன் வளர்சியிலும், அந்த கலா மன்றத்தால் நடத்தப்பட்ட கலை நிகழ்சிகளில் பங்குகொண்டும் தன்னை வளர்த்துக் கொண்டார்.

கோவில் உற்சவ காலங்களில் மற்றும், விளையாட்டுப் போட்டிகளில் நடைபெறும் நிகழ்சிகளை தொகுத்து வழங்குவது இவருக்கு பிடித்த விடயம். அது பிற்காலத்தில் இவர் ஒலிபரப்பு துறையில் பிரவேசிப்பதற்கு மிகவும் உதவியது.

இவர் மட்டக்களப்பில் உயர்தரம் படித்துக்கொண்டு இருக்கும்போது மட்டக்களப்பில் உள்ள இசைக்குழு ஒன்றில் இணைந்து கொண்டார். அதற்கு இவரது மைத்துனர் பக்கபலமாக இருந்தார். இவர் மைத்துனர் இரா.தெய்வராஜன் ஒரு பாடகர். திருக்கோவிலை சேர்ந்த இவர் மட்டக்களப்பில் குடும்பத்துடன் இருந்தார். பயிற்றப்பட்ட ஆசிரியர். இவரிடமும் பல திறமைகள் இருந்தன. திரு.செல்வராஜன் அவர்களுக்கு இவர் மைத்துனர் ஒரு அகத்தூண்டலாக இருந்திருக்கின்றார்.

இவர்களுக்கு உரிய பாடல்களை மட்டக்களப்பின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான அமரர் எருவில் மூர்த்தி அவர்களே அந்தக் காலத்தில் எழுதிக்கொடுத்தார். பிற்காலத்தில் கோவிலூர் செல்வராஜன் ஒரு பாடலாசிரியராக வருவதற்கு கவிஞர் எருவில் மூர்த்தி அவர்களே அகத்தூண்டல் என்றால் அது மிகையாகாது. இவர் இணைந்துள்ள இசைக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோவில்களில் திருவிழாக்கள் நடக்கும் உற்சவ காலங்களில் இசை நிகழ்சிகள் செய்வார்கள் அதில் செல்வராஜன் அவர்கள் கலந்துகொள்வார். இவர் இருந்த ஜெயாலயா என்ற இசைக்குழுதான் முதல் முதலில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தங்கள் ஒலிப்பதிவை செய்து பாடல்களை காற்றலையில் தவழவிட்டது. இலங்கை வானொலியின் பின்னாளில் திரு கோவிலூர் செல்வராஜன் இணைவதற்கு அந்த நிகழ்வை அத்திவாரமாக எடுத்துக் கொள்ளலாம். சரி இனி இவரின் வரலாறு எப்படி அமைகிறது என்று பார்ப்போம் எழுபதுகளின் ஆரம்பத்தில் கொழும்பு சிவா என்டர்ரெயின்மென்ஸ் மூலமாக தலைநகருக்கு அழைக்கப்பட்டார். எப்படியென்றால் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. எஸ்.சிவஞானம் அவர்களின் தந்தையார் அக்கரைப்பற்றில் ஒரு நகைக்கடை வைத்திருந்தார். அவரிடம் அடிக்கடி வரும் சிவா அவர்கள் ஒருமுறை, பொத்துவிலுக்கு தெற்கே அமைந்துள்ள உகந்தைமலை முருகன் உற்சவ காலத்தில் கலந்துகொள்ள வந்திருந்தார். திரு.செல்வராஜன் கோவில் நிகழ்சிகளை ஒலிபெருக்கியில் அறிவிப்பு செய்துகொண்டு இருந்தார் . அப்பொழுது சிவஞானம் அவர்கள் இவரை அணுகி நன்றாக பேசுகின்றீர்களே. என்னோடு கொழும்புக்கு வரலாமே, நான் பொப் இசை நிகழ்சிகளை நடத்துகின்றேன்.நீங்கள் அங்கு மேடையில் அறிவிப்புகள் செய்யலாம் என்றார். இவரோ அதை விளையாட்டாக எடுத்துக்கொள்ள, அவரோ விடுவதாக இல்லை. பின்னர் சரி பார்க்கலாம் என்று செல்வராஜன் சொல்லிவிட்டார்.

அந்தக்காலம் ஈழத்துப் பொப்பிசை பாடல்கள் வரவேற்புப் பெற்றிருந்த காலம். இவர் மட்டக்களப்பில் உயர்தரம் படித்துக் கொண்டிருந்ததால் . அந்த பரீட்சை எழுதிவிட்டு செல்ல இவருக்கு உத்தேசம் இருந்தது. வீட்டில் இவர் செல்லமென்ற படியால் அப்பா, அம்மா அவர்களிடம் சொல்லி சரிக்கட்டி விடலாம் என்று எண்ணிக்கொண்டார். இவருக்கு மீடியாவுக்குள் வேலை செய்யவேண்டும் என்ற எண்ணம் ஆரம்பத்திலிருந்தே இருந்தது. பின்னர் இவர் உயர்தரம் சித்தியடைந்தபின் ஆசிரியர், எழுதுவினைஞர் போன்ற வேலைகள் கிடைக்க இருந்தன. இவர் ஒரேபிடியில் தான் ஒரு ஊடகவியலாளராகவே ஆக வேண்டுமென்று விரும்பினார்.

அந்தவகையில் நண்பர் சிவா அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அவர் முன்பு அழைத்தபடி கொழும்பு சென்றார். அவருடன் அவர் வீட்டில் தங்கி இருந்தே தனது கலை,இலக்கிய வாழ்வுக்கு அத்திவாரம் போட்டார்.. சிவா என்டர்ரெயின்மென்ஸ் மூலம் பல இசை நிகழ்சிகள், பொப் இசை நிகழ்சிகள் செய்தார் . அந்த நேரத்தில் மறைந்த நண்பர் கே.எஸ். ராஜா கூட இவருக்கு நண்பராகினார். சிவாவின் நிகழ்சிகளை அவருடன் சேர்ந்து இவரும் தொகுத்து வழங்கினார் . கொழும்பு,மலையகம்,யாழ்,என்று நிகழ்சிகளை நடத்தினார்கள்.


சிவாவிற்கு கொழும்பு செட்டியார் தெருவில் மெய்கண்டான் நிறுவனத்துக்கு சொந்தமான கட்டிடத்தில் ஒரு நகைக் கடையும் இருந்தது. அங்கு இவர் அடிக்கடி சிவாவுடன் இருப்பார் அந்த நேரம் மெய்கண்டான் குமரகுருநாதன் அவர்கள் அடிக்கடி இவரோடு வந்து பேசுவார்.

அவர் அப்பொழுது கலாவல்லி என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். அவர் கோவிலூர் செல்வராஜனை அந்த பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருக்கும்படி கேட்டார். சிவாவும் அதற்கு ஒப்புதல்தர, இவர் அந்த பதவியில் அமர்ந்து கொண்டு செயல்படத் தொடங்கினார் . அதேநேரம் இவர் தன்னை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி தேர்வுநாடியாக பதிவு செய்துகொண்டு பட்டப் படிப்பையும் மேற்கொண்டார் . இதனிடையில் கலாவல்லியில் 'இளமைக் கோவில் ஒன்று' என்ற இவரின் முதலாவது தொடர் வந்தது.. அதன்பின்னர் இவர் மெய்கண்டான் நிறுவனத்தாருடன் சேர்ந்து 'நட்சத்திர மாமா' என்ற சிறுவர்களுக்கான சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டார்.. அதில் இவர் 'மலைக்கோட்டை மர்மம்' என்ற ஒரு தொடரை எழுதி வந்தார்.

இதைவிட ஈழத்துக் கலைஞர்கள்,தமிழ் நாட்டிலிருந்து வரும் கலைஞர்கள் என்று நேர்காணல் செய்து கலாவல்லியில் பிரசுரித்தார். இந்த காலத்தில் தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகையிலும் சிறுகதைகள் அவ்வப்போது எழுதிவந்தார். ஈழத்தில் பத்திரிகைத் துறைக்கு அது ஒரு பொற்காலம் என்றுதான் சொல்லவேண்டும்.

கொழும்பு திரைப்படக் கூட்டுத்தாபனதில் தமிழ் பிரிவுக்கு, மறைந்த இவரது நண்பர் கே.எஸ்.ராஜா அன்று பொறுப்பாக இருந்தார். இ.ஒ.கூட்டுத்தாபனத்திலும் அவர் பகுதி நேர அறிவிப்பாளராக இருந்தார். புதிய தமிழ் திரைப்படங்கள் திரையிடமுன், பத்திரிகையாளர்களுக்கான காட்சிக்கு செல்வராஜனை கே.எஸ்.ராஜா அவர்கள் அழைப்பார். பொப் நிகழ்சிகளில் இவர்கள் இருவரும் ஏலவே அறிமுகமாகி இருந்தார்கள் அல்லவா. அந்த நட்பினோடு இவரை அழைப்பார் ராஜா. அந்த ப்ரீவியு காட்சிகளை பார்த்து இவர் தனது கலாவல்லியில் படங்கள் பற்றிய விமர்சனகளை எழுதி வந்தார். பைலட் பிரேம்நாத் திரைபடத்தில் நடிக்க இலங்கை வந்திருந்த சிவாஜி,மேஜர் உட்பட அனைத்து நடிக நடிகர்களையும் திரு.கோவிலூர் செல்வராஜன் அவர்கள் நேர்காணல் செய்து கலாவல்லியில் பிரசுரித்தார்.

# பெண்களின் மன உணர்ச்சி விரகதாப வெளிப்பாடுகள்





பாத்திமா றூபா

பெண் உணர்வுகளின் பாடு பொருளாக கவிஞர் தாமரையின் வரிகளைப் பார்க்கிறேன். உணர்வோடு பின்னிப் பிணையும் இவருடைய எழுத்துக்களுக்கு நிகர் இவரேதான். அந்த வகையில் இவருடைய அண்மையில் வெளியான **'மல்லிப் பூ வச்சு வச்சு வாடுதே'** பாடல் வரிகள் பிரிவுத் துயருற்ற பெண்களின் அவலக் குரலாக ஒலிக்கிறது. இதனை வரலாற்று ஏனைய கவிஞர்களுடன் ஒப்பிடுகையில்,

**பெண்களின் மன நிலை உணர்வுகளை தமிழ் இலக்கிய வரலாறுகளில் இருந்து பார்க்கின்ற போது..**

அகத்திணை மரபிற்கு பேர் போன காலமாக சங்க காலம் காணப்படுகிறது. இக்காலத்தில் நானூறு அகத் திணைப் பாடல்களை குறுந்தொகையில் காணலாம். அதிலே ஒன்றாக,

**'இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரா ரெவணரோ வெனப்**
**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை யிலங்கெயி றாக்**
**நகுமே தோழி நறுந்தண் காரே..'**

குறுந்தொகையில் 126 ஆவது பாடலாகிய இதனை ஒக்கூர் மாசாத்தியார் எழுதியுள்ளார்.

இதன் பொருளினை அறியுமிடத்து, தலைவி தோழியிடம் சொல்கிறாள் 'தோழி, எங்கள் இருவரினதும் இளமையினைக் கவனியாது பொருள் தேடிப் பிரிந்து சென்ற தலைவன் கார் காலம் வந்ததும் வருவேன் எனச் சொன்ன காலம் வந்தும் அவன் இன்னும் வராமையினால் முல்லையின் கொத்தான அரும்புகள் எனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கின்றன.' என தான் தலைவன் வருகையினை எதிர்பார்திருந்த தலைவி அந்த எதிர்பார்பினை வெளிப்படையாகச் சொல்ல தயக்கமுற்ற நிலையில் கார் காலத்தின் மீது சாடி முல்லை எனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறது. அதற்காகவாவது அவர் இங்கு வந்திருக்கலாம் என தனது காதல் ஏக்கத்தினை இயற்கையில் சாடுகிறாள் தலைவி.

இதே சங்க காலத்தில் குறுந்தொகைப் பாடல் 226 இல் நெய்தல் நிலத்து ஒழுக்கமாக மதுரை எழுத்தாளர் சேந்தன் பூதனார் பாடிய பாடலினைப் பார்க்கும் போது,

**'பூவோடு புரையும் கண்ணும் வேயென**
**விறல் வனப்பு எய்திய தோளும் பிறை என**
**மதி மயங்குறூஉ நுதலும் நன்றும்**
**நல்ல மன் வாழி தோழி அல்கலும்**
**தயங்கு திரை பொருத தாழை வெண்பூ**
**குருகு என மலரும் பெருந்துறை**
**விரி நீர் சேர்ப்பனோடு நகாஆ ஊங்கே..'**

என தலைவி தோழியிடம் கூறுகிறாள். அதாவது, 'நான் தலைவனை சந்திப்பதற்கு முதல் அழகிய வனப்போடு காணப்பட்டேன். எப்போ தலைவனுடன் கூடிக் கலந்து மகிழ்ந்தேனோ அப்போதே அவன் மீதான காதல் ஏக்கம் என்னைக் கொன்றுதீர்ப்பதனால் நெய்தல் நிலத்தாழையின் வெண்மலர்கள் மலர்ந்திருந்தும் சூடிக் கொள்ள யாருமற்ற கடல்நாரையென பிறர் எண்ணுமளவிற்கு அவனுக்காக காத்துக் காத்து காதல் நோயுற்றுக் காணப்படுவதால் வனப்பிழந்த மாதுவாய்க் காணப்படுகிறேன்' என்று தோழியிடம் தன் காதல் ஏக்கத்தினை வாய்விட்டுச் சொல்கிறாள் தலைவி.

இங்கே ஒக்கூர் மாசாத்தியார் காதல் விகரதாபத்தை தயக்கங்காட்டிச் சொன்னதை, மதுரை எழுத்தாளர் சேத்தன் பூதனார் தலைவி தன் தோழியிடம் தலைவன் இல்லாத இந்த சோக நிலை என்னை வாட்டி வதைப்பதனால் நான் எழிலிழந்து காணப்படுகிறேன் என சற்று ஒருபடி மேலாகக் கூறுகிறார்.

தற்கால தலைவியின் காதல் ஏக்கத்தினை கவிஞர் தாமரை எந்தத் தூதும் இல்லாமல் இன்னும் பல படி மேலேறி நேரடியாகவே தலைவனிடமே சொல்வதாக,

**'மல்லிப்பூ வச்சு வச்சு வாடுதே...'** பாடல் வரிகளில்,

**'...தினம் சொப்பனத்தில் மட்டும்தான் உன்ன நான் சந்திச்சன்**





**ஹே எப்போ வரப்போற?**
**மச்சான் எப்போ வரப்போற?**
**பத்துமட பாய வந்து சொக்கி விழப்போற'**

என தாமரையின் வரிகள் தலைவனைப் பார்த்து பல கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றன. பிரிந்த அனைத்துத் தலைவிகளின் ஏக்கக் குரலாகவே இங்கே இவ்வரிகள் பதியப் படுகிறது.

**'வாசல பாக்குற கோலத்தக் காணோம்**
**வாலிய சிந்துறேன் தண்ணிய காணோம்**
**சோழி தேடி போனேன் காணாத தூரம்**
**கோட்டிக்காரி நெஞ்சில் தாளாத பாரம்**
**காத்திருந்து காத்திருந்து கண்ணு பூத்திடும்**
**ஈரமாகவும் கண்ணோரம் கப்பல் ஆடும்.'**

என்பதானது எதிர்பார்ப்பின் உச்சமாகக் காணப்படுகின்றது. எதிர்பார்த்துப் பார்த்து கண்கள் பூத்ததுதான் மிச்சம். அப்போவும் நீ வரவில்லையே எனும் போது தன்னறியாமலே பல நாட்கள் ஏமாற்றம் கண்ணீராய்க் கரைகிறது. அந்தக் கண்ணீரில் கப்பல் ஆடும் என்ற ஆழம் நிறைந்த வரிகள் கண்ணீரின் அளவை விழிகளுக்குள் விரிக்கிறது.

**'தூரமா போனது துக்கமா மாறும்**
**பக்கமா வாழ்வதே போதும்னு தோணும்**

நீ தூரமாப் போனது துக்கமாக இருக்கு. என் பக்கத்திலேயே இரு அதுவொன்றே போதும் எனக்கு. என்ற வரிகள் காதலை அள்ளித் தெளிக்கிறது.

**'ஊரடாங்கும் நேரம் ஒரு ஆசை நேரம்**
**கோழி கூவும் போதும் தூங்கமா வேகும்**
**அங்கு நீயும் இங்கு நானும் என்ன வாழ்க்கையோ**
**போதும் போதும் சொல்லாம வந்து சேரும்.**

விகரதாபத்தின் உச்ச நிலையினை ஒரு பெண்ணாக இருந்து கொண்டு இதை விட ஆழமாகச் சொல்ல முடியாது. பெண் உணர்வில் நின்று எழுதியிருக்கிறார் தாமரை.

**'உத்தரத்த பார்த்தே நானும் மக்கிவிடப் போறேன்**
**அட எத்தன நாள் ஏக்கம் இது**
**பெரும் மூச்சில துணிக்கொடி ஆடுதே துணி காயுதே**
**கள்ள காதல் போல**
**நான் மெல்ல பேச நேரம்**
**சத்தம் கித்தம் கேட்டா பொய்யாக தூங்க வேணும்.**

மனதோட பேசிப் பேசி உனக்காகவே உருகி உருகி தூக்கம் இழந்து கிரங்கிக் கிடக்கிறேன். ஆனா ஊர் பார்க்கிற போது மட்டும் பொய்யாக கவலையற்றவள் போல தூங்கிறதா பாவனை செய்கிறேன். தூக்கம் மிகவும் முக்கியம்; அதுவொரு மருந்தும் கூட. எனக்கான மருந்தாக உனைப் பார்க்கிறேன். வா மச்சான் வந்து பத்து மடப் பாய சொக்கி விழு என தலைவிகளின் உணர்வில் நின்று பேசியிருப்பது அருமை... அருமை....

பெண்களின் மன உணர்ச்சி விரகதாப வெளிப்பாடுகள் நாணமாக, ஆவலாக பின் தாபமாக வெளிப்படுவது அபரிவிதமானது.

ஆக மொத்தத்தில் அத்தனை விகரதாப உணர்வுகளையும் ஒருமித்து ஒரே பாங்கில் தாமரையால் சொன்னதைப் போல எவராலும் இனியும் சொல்ல முடியாததாகவே நான் நினைக்கிறேன். காரணம் தாமரை நிகழ் காலத்தில் மட்டுமல்ல, எதிர் காலத்திற்கும் ஏற்ற வகையில் இவ்வரிகளைக் கோர்த்திருப்பது அற்புதம்.

இது ஒரு ஆண்டாளின் கவி வருகையில் ஏற்பட்ட திருப்பு முனையாகவே பார்க்கிறேன்.

# 2023: இலங்கையின் ஒட்டுமொத்த கல்வி முறையும் முற்றாக மாற்றம்

வித்தகம்
கா. சாந்தகுமார்

2023 இலங்கையின் ஒட்டுமொத்த கல்வி முறையும் முற்றாக மாற்றப்படுவதற்கான அடித்தளம் போடும் ஆண்டாக கல்வி அமைச்சால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கற்பிக்கும் முறை மற்றும் பரீட்சை முறை, கணிப்பீட்டு புள்ளிகள் வழங்கும் முறை அனைத்தும் அடுத்த வருடம் முதல் முற்றாக மாற்றப்படுகிறது. அது தொடர்பான முழு விளக்கம் கீழே உள்ள கட்டுரையில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு முதல் சாதாரண தரப் பாடத்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தை உள்ளடக்குவதோடு, 8ஆம் தரத்தில் இருந்து செயற்கை நுண்ணறிவு பாடமாக அறிமுகப்படுத்தப்படும்

தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாமல் வேலை வாய்ப்புகளைத் தேடுவது அடுத்த ஐந்து ஆண்டுகளில் கடினமான பணியாக இருக்கும்

கணிணி அறிவின்றி 2023 இல் ஆசிரியர்கள் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட முடியாது.

1. பாடநூல்கள், ஆசிரியர் வழிகாட்டி நீக்கம்: அதற்குப் பதில் இதழ்வடிவ முறை (மொடியுல்)
2. முன்பள்ளி, தரம் 1,6,10 பூரண கலைத்திட்ட மாற்றம் 2023
3. பாடவேளைகள் 1 மணித்தியாலம் ஒரு நாள் 5 பாடவேளை மிகுதி உடற்கல்வி செயற்பாடுகள்
4. பாடசாலை தவணை முறை நீக்கம்: Semister முறை அறிமுகம் 1 semister 12-14 வாரங்கள்

**2023, 2024 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதியகல்வி சீருத்தம்**

5. கற்றல் பேறு நீக்கம்: விருப்புக்குரிய நோக்கம் அறிமுகம்
6. கலவை கற்பித்தல் முறை அறிமுகம்:
   - i. நேரடியாக கற்றல்
   - ii. ICT கற்றல்( zoom, YouTube)
7. மொடியுல் தீம் அடிப்படையில் உருவாக்கம்
8. தரம் -9 இல் தேசிய பொது பரீட்சை அறிமுகம்
9. இடைநிலை பிரிவு மாற்றம்: சிரேஷ்ட இடைநிலை தரம் 12-13, கனிஷ்ட இடைநிலை 6-11
10. தேசிய கல்வி குறிக்கோள் 6
11. பொது பரீட்சையில் எழுத்து பரீட்சைக்கு 60% புள்ளிகள் மிகுதி 40% செய்முறை அனைத்து பாடங்களுக்கும்
12. புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் mindset மாற்றம் தொடர்பான செயலமர்வுகள் 2021 இல் ஆரம்பம். இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி.
13. PTS பாடம் நீக்கம்
14. மீத்திறன் கூடிய மாணவர்கள் உரிய மொடியுல்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன் பூர்த்தி செய்து வகுப்பேற்றம் பெறலாம்.

அனைத்து வகுப்பறையிலும் மடிக்கணினி மூலமே கற்றல் இடம்பெறும் 2023 தரம் 1, 6, 10 வகுப்பறைகள் மாற்றத்திற்குள்ளாகும்.

இப் புதிய வரைபுக்கு கல்வி மற்றும் கல்வி ராஜாங்க அமைச்சர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

# அழகுக் குறிப்புகள்

### கருவளையம் மறைய



வெள்ளரிக்காய் விதையை பொடி செய்து அதில் தயிர் சேர்த்து பசைப்போல (Paste) ஆக்குங்கள்.

இந்த பேஸ்ட்டை கருவளையம் உள்ள பகுதியில் தொடர்ந்து பூசி வர முப்பது நாளில் கருவளையும் இருந்த இடம் காணாமல் போயிருக்கும்.

### கருவளையம் நீங்க

சந்தனம் மற்றும் பன்னீரை கொண்டு செய்யப்படும் பேஸ்ட்டை தூங்கச் செல்வதற்கு முன்பு, இதனை கண்களின் கீழ் தடவிக் கொள்ளுங்கள். காலையில் கழுவி விடுங்கள்.

### உதடுகள் சிவப்பாக மாற



உதடுகள் சிவப்பாக மாற பீட்ருட் மற்றும் மாதுளம் பழம் மிகவும் உதவியாக இருக்கும்.

பீட்ரூட் உதடுகளை சிவப்பாக்குவதில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

பீட்ருட் அல்லது மாதுளம் பழத்தின் சாற்றை உதடுகளின் மீது பூசி வந்தால் உதடுகள் மிக விரைவிலேயே கவர்ச்சியாக மாறும்.

### கூந்தல் அடர்த்தியாக



லாவண்டர் எண்ணெய் - 5துளிகள் விளக்கெண்ணெய் - 1 ஸ்பூன் 2 எண்ணெய்களையும் ஒன்றாக கலந்து கொள்ள வேண்டும்.

இந்த கலவையை உங்கள் தலையில் நன்றாக தடவ வேண்டும். 15 நிமிடங்கள் நன்றாக ஊற வைக்க வேண்டும்.

பிறகு, நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தும் ஷாம்பூவால் தலை முடியை தேய்த்து வெது வெதுப்பான நீர் கொண்டு அலச வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் இதனை தொடர்ந்து செய்து வருவதால் உங்கள் முடி விரைவில் அடர்த்தியாகும்.

*A R MUNAFIRA*
*ERAVUR*



# ஆழ்ந்த உறக்கம் கரு வளர்ச்சிக்கு அவசியம்

கர்ப்பிணிகளுக்கு ஓய்வு அவசியம். அவர்கள் உறங்கும் போது சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். அது தாய்க்கும், சேய்க்கும் பாது காப்பானது. கர்ப்ப காலத்தில் பெண்கள் குறைந்தபட்சம் 8 மணி நேரம் உறங்குவது கருவின் வளர்ச்சிக்கு அவசியமானது என மகப்பேறு மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

புரண்டு படுத்தால் குழந்தை கொடி சுற்றிப் பிறக்கும் எனக் கூறப்படுவது உண்மையல்ல. இருப்பினும் எழுந்து உட்கார்ந்து பிறகு மெதுவாக படுக்க வேண்டும். ஒருக்களித்துப் படுப்பதே நல்ல படுக்கை முறை. மல்லாந்து படுக்கும்போது கருப்பை இரத்தக் குழாய்களை அழுத்துவதால் மூச்சுத்திணறல், இரத்த ஓட்டக்குறை போன்றவை உண்டாகலாம்.

இரவு நேரத்தில் எளிதில் உறக்கம் வராது. எனவே, சிறிது தூரம் மெதுவாக நடந்துவிட்டு வந்து உறங்கலாம். அசதியில் உறக்கம் வரும். இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக வெது வெதுப்பான நீரில் குளித்து விட்டு உறங்கச் செல்வது நன்மை தரும். எந்த காரணம் கொண்டும் குப்புற படுத்து உறங்கக் கூடாது.

ஏனெனில் அது கருப்பையை அழுத்துவதோடு குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். உறங்கும் முன் தலைக்கு அருகில் செல்போன் வைத்துக்கொண்டு உறங்குவதை தவிர்க்க வேண்டும். அதிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சு குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

தலையணையை வசதியான வகையில் வைத்து உறங்குவது நல்லது கால்களுக்கும் வைத்து உறங்குவது கால் வீக்கம் வலி ஏற்படுவதை தவிர்க்கலாம். கடைகளில் கிடைக்கும் சிறிய அளவிலான கர்ப்பகால தலையணைகளை வாங்கி உபயோகிக்கலாம்.

இரவு நேரங்களில் அதிக இறுக்கமான ஆடைகளை அணிவதை தவிர்க்கவேண்டும். ஏனெனில் மார்ப்பக வளர்ச்சி, இடுப்பு பகுதிகள் விரிவடையும். அப்பொழுது ஏற்படும் சிரமத்தை தவிர்க்கவே இறுக்கமான ஆடைகளை தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலான கர்ப்பிணிகள் நெஞ்செரிச்சல், அஜீரணக் கோளறுகளினால் சிரமப்படுவார்கள். இவர்கள் உண்ட உடன் உறங்கச் செல்லக்கூடாது. எளிதில் ஜீரணமாகும் உணவுகளை மட்டுமே உண்ணவேண்டும். படுக்கும் முன் வெது வெதுப்பாக பால் குடித்தால் உறக்கம் வரும்.

# கர்ப்பகால அசாதாரண நிலமைகள் பிள்ளையில் பிறழ்வுகளை ஏற்படுத்துமா?

✍ திருமதி.கலாதேவி சந்திரகுமார்,
உளவளத்துணை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கல்முனை வடக்கு.



ஒரு ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாகவோ, சம்பிரதாய ரீதியாகவோ திருமணம் செய்த பின்னர் உறவு கொள்வதன் மூலம் உருவாகும் கரு சட்ட ரீதியான கருவாகக் கொள்ளப்படும். ஆணின் இருபத்து மூன்று நிறமூர்த்தங்களும் பெண்ணின் இருபத்து மூன்று நிறமூர்த்தங்களும் சேர்வதன் மூலம் கரு உருவாகின்றது. குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை தீர்மானிப்பது ஆணின் நிறமூர்த்தமாகும். ஒரு பெண்ணுக்கு கர்ப்ப காலம் என்பது மகத்தான, சந்தோஷமான காலப் பகுதியாகும்.

இவர்களுக்கு சமூகத்தில் சிறப்பானதொரு மதிப்பும் மரியாதையும் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு தம்பதியினரும் குழந்தை உருவாவதற்கு முன்னர்; தங்களை உடல், உள, பொருளாதார ரீதியாக தயார் படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறன்றி கர்ப்பகால அசாதாரண நிலமைகள் பிள்ளையில் உள மற்றும் நடத்தை பிறழ்வுகளுக்கு வழிவகுப்பதாக அமைந்து விடும்.

கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு கர்ப்பவதியும் விற்றமின்கள், கனியுப்புக்கள் (போலிக்கசிட், கல்சியம், இரும்பு) போதியளவு நீர் அருந்துதல், போஷாக்கான உணவு உட்கொள்ளல், மற்றும் மன அமைதி, சந்தோஷம், ஓய்வு என்பன கருவின் வளர்ச்சி, முதிர்ச்சி, விருத்திக்கு அவசியமாகும். மூன்று, மூன்றரை மாதங்களில் மனித உரு உருவாகிவிடும். ஒன்பது மாதங்களின் பின்னர் குழந்நை பிறக்கின்றது. இக்காலப் பகுதியில் கர்ப்பவதி உடல், உள ரீதியாக ஆரோக்கியமாக இருப்பது கட்டாயமாகும்.

முதல் மூன்று மாதங்களும் மிகமுக்கியமானதாகும். கருப்பையில் கரு நிலைத்திருக்கும் காலம் இதுவாகும். இக்காலப் பகுதியில் சாப்பிட ஆசையிருந்தாலும் வாய் ஒத்துழைக்காது. அடிக்கடி வாந்தி ஏற்படும். அதற்காக சாப்பிடாமல் இருக்காது சிறு இடைவெளிவிட்டு இலகுவில் சமிபாடு அடையக்கூடிய பழங்கள், காய்கறிகள், கஞ்சி மற்றும் மனதுக்குப் பிடித்த சத்துள்ள உணவுகளை உட்கொள்ளலாம். இக்காலப் பகுதியில் தொற்று நோய்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

பொதுவாக கர்ப்பகாலத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதனால் சன நெருக்கடியான இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்வதுடன், செல்லப் பிராணிகளை தொடுவதையும், நீண்ட தூரப் பயணங்கள், பாரமான வேலைகள் செய்வதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஏனெனில் இக்காலப் பகுதியிலேயே கருகலைவதற்கான சந்தர்ப்பம் கூடுதலாக காணப்படுகின்றது.

குழந்தையின் உடல் உறுப்புக்கள் முதல் மூன்று மாதங்களுக்குள் உருவாகி விடும். கரு சாதாரண இடத்தில் உள்ளதா? இதயத் துடிப்பு, மூளை வளர்ச்சி, முதுகுத் தண்டு வளர்ச்சி, மற்றும் நரம்பு மண்டலம் சார்பாக உருவாகி உள்ளதா? என்பதனை ஸ்கேன் செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு இல்லையெனில் வலது குறைந்ததென கண்டறியப்பட்டால் கருச்சிதைவு செய்வதற்கு சட்டரீதியான அனுமதியுண்டு.

ஐந்தாம் மாதத்தின் பின்னர் கேட்கும் திறன் விருத்தியடையும். இதனால் வெளிச்சூழலில் இடம்பெறும் சத்தங்களை சிசு அவதானித்துக் கொன்டிருக்கும்.

தாயின் உடல், உள ஆரோக்கியம் வயிற்றினுள்ளே இருக்கும் சிசுவின் அகச்சூழலில் தாக்கம் செலுத்தும்.

இதனால்தான் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் சிறந்த வளர்ச்சி, விருத்தி, முதிர்ச்சியுடைய குழந்தைகளாக பிறக்கின்றனர்.

கர்ப்ப காலத்தில் அனுபவிக்கின்ற அசாதாரண நிலமைகளான வறுமை, சண்டை, சச்சரவு, போதைப்பொருள் பாவனை, வன்முறைகள், கவலை என்பன தாய்க்கு உளநெருக்கீடு, பதகளிப்பு, மனச்சோர்வு என்பவற்றை ஏற்படுத்துவதனால் தாயின் உடல், உளநலம் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் குறைமாத பிரசவத்திற்கு வழிவகுப்பதுடன், குழந்தையின் வளர்ச்சியுடன் கூடிய அந்தந்த பருவங்களில் இடம்பெற வேண்டிய முதிர்ச்சியிலும் தாக்கம் செலுத்தும். மற்றும் எதிர்காலத்தில் பிள்ளை மற்ற பிள்ளைகளுடன் சேராமல் தனித்திருத்தல், கற்றல் ஒழுங்கீனம், குழப்பமான நடத்தை, மனவெழுச்சி சமநிலையின்மை, பிள்ளைப் பருவ பீதி, அச்சம், மனச்சோர்வு, தொடர்பாடல் ஒழுங்கீனம், உளவிருத்திக்குறைபாடு (மந்த புத்தி) போன்ற உள மற்றும் நடத்தை பிறழ்வுகள்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இக்காலப் பகுதியில் தாய் நோய்வாய்ப்பட்டிருப்பின்அவருக்கு பிறக்கும் குழந்தை சாப்பிடாது எதிலும் அக்கரையின்றி இருப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்கி குறைவாக இருப்பதனால் அடிக்கடி நோய் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. மற்றும் சுறுசுறுப்பற்ற நிலையில் சோர்வாகவும், பற்றற்ற நிலையிலும் இருப்பர்.அத்துடன் அதீத செயற்பாடு உள்ள பிள்ளைகளாக மாறுவதற்கும் வழிவகுக்கும். இவர்கள் இடத்தில் இருக்க மாட்டார்கள், ஏறுவது, குதிப்பது, விழுவது, உடைப்பது, மற்றவர்களை சீன்டுவது அதிக கோபப்படுவது, கட்டுப்பாடுகளுக்கும் கட்டளைகளுக்கும் பணியாதவர்களாகவும் காணப்படுவர்.

எதிர்காலத்தில் சிறந்த உடல், உள ஆரோக்கியமுடைய சந்ததியினரை உருவாக்குவதற்காக கர்ப்ப காலத்தில் கர்ப்பவதிகள் கவலைப்படாமலும், கோபப்படாமலும் இருப்பதுடன் ஆக்ரோசமான படங்கள், நிகழ்வுகளைப் பார்ப்பதையும் தவிர்த்துக்கொள்வது நல்லது. மற்றும் எக்ஸ்ரே கதிர்கள் கருவிலுள்ள சிசுவைப்பாதிக்கும் என்பதனால் எக்ஸ்ரே எடுப்பதை தவிர் த்துக்கொள்வது நல்லது. அவசியமாயின் வைத்திய ஆலோசனையுடன் நடந்து கொள்ளவும். கரு உருவான பின் குழந்தை வேண்டாம் என்ற எண்ணமோ, அதனை அழிப்பதற்கான முயற்சியிலோ ஈடுபட்டால் அது விஷேட தேவையுடைய பிள்ளைகள் பிறப்பதற்கும் வழிவகுக்கும். இச்செயற்பாடு எதிர் காலத்தில் தாய்க்கும் பிள்ளைக்கும் பெரும் சுமையாகவும், வேதனையாகவும் அமைந்து விடும்.

எனவே, தான் கர்ப்ப காலத்தில் தாயின் உடல், உள ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக அவரின் கணவர் மனைவியின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அவரின் தேவைகளை நிறைவேற்றுவதுடன், ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் குடும்ப சூழலை சந்தோஷமான இடமாக மாற்ற முயற்சி எடுத்தல் வேண்டும். அவசியமாகும்.


வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்
கொடிய கொரானாவிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்
கல்முனை NET
kalmunainet.com

10 ஆம் பக்க தொடர்ச்சி...



இது மனிதகுல வரலாற்றில் அமைதியை நோக்கிய பாதையில் திருப்புமுனையாக என்றென்றும் நினைவு கூரப்படும்.

இது போன்றதொரு இனவெறிச் சங்காரமும் கொடூரமும் மீண்டும் நிகழாமல் தடுக்க அவர் உடனடி நடவடிக்கை களை உறுதியுடன் தொடர்ந்தார். அத்துடன் நிற்கவில்லை முஸ்லிம் சகோதரத்துவத்தைக் காட்ட முஸ்லிம் பெண்கள் போன்றே ஆடை அணிந்து பாதிக்கப்பட்ட சமூகத்திற்கும் நாட்டு மக்களுக்கும் சகோதரத்துவத்தின் மகிமையையும் கூட்டுறவையும் வெளிப்படுத்தினார்.

எந்த அரசியல் தலைவரும் விரும்பாத செய்திராத ஒரு பணியை படுகொலையின் பின்னர் அவர் செய்தார். அது உலகெங்கிலும் பாராட்டுகளைப் பெறும் விதத்தில் அமைந்திருந்தது.

மற்றவர்கள் பழிவாங்கும் அச்சுறுத்தலைக் கொண்டிருந்தால், ஜெஸிந்தா பாதிக்கப்பட்டவர்கள் மீது தனது கவனத்தை செலுத்தினார், இந்த முஸ்லீம் "சகோதரர்கள், மகள்கள், தந்தைகள் மற்றும் குழந்தைகள்... நியூசிலாந்தைச் சேர்ந் தவர்கள். அவர்கள் நாங்கள் தான்." வலியுறுத்தினார்.

அம்மட்டுமா அவர் பாராளுமன்றத்தில் புனிதமான குர்ஆனை வாசிக்கச் செய்தார்.

ஜெஸிந்தா உண்மையிலேயே அவரது மக்களின் பிரதிபலிப்பாகும், ஏனெனில் முஸ்லிம்களுடன் இணைந்து கருணை மற்றும் ஒற்றுமைக்கான செயல்கள் நியூசிலாந்து மக்களால் எங்கும் செய்யப்பட்டதற்கு அவரே முன்னுதாரணமாய்த் திகழ்ந்தார்.

வன்முறை தீவிரவாதத்தை எவ்வாறு கையாள்வது, தங்கள் தேசத்தை எவ்வாறு ஒன்றிணைப்பது மற்றும் துன்பங்களை எதிர்கொள்வது மற்றும் பலவற்றைச் சமாளிப்பது போன்றவற்றில் உலகத் தலைவர்களுக்கு ஒரு புதிய அளவுகோலை அமைத்த அவர்களின் தலைவரைப் பற்றி நியூசிலாந்து மக்கள் நம்பமுடியாத அளவிற்கு பெருமைப்பட வேண்டும். முக்கியமாக உலகெங்கிலும் உள்ள தலைமைப் பாத்திரங்களில் அதிக பாலின சமநிலையைக் கொண்டிருப்பதன் அவசியத்தை முன்னிலைப்படுத்துவதற்காக.

இந்த இளம் பிரதமரின் தீவிரத் திட்டங்கள் அவரது நாட்டின் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் உலுக்கிய விதம் கிறிஸ்ட்சர்ச் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலளித்ததற்காக ஜெஸிந்தா உலக கவனத்தை ஈர்த்திருந்தார்.

"மனித உரிமைகள், சமூக நீதி, சமத்துவம், ஜனநாயகம் மற்றும் சமூகங்களின் பங்கு ஆகியவற்றின் மதிப்புகளில்" தான் உறுதியாக நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

அவர் மிகவும் மகிழ்ச்சியான ஒரு பாரம்பரிய சமூக ஜனநாயகவாதியின் வடிவமைப்பில் இருக்கிறார்.

அப்படி என்ன, உண்மையில், புதியது? அவர் கருணையை ஆளும் நல்லொழுக்கமாக வலியுறுத்துகிறார். கிறிஸ்ட்சர்ச் படுகொலையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் களுக்காக ஜெஸிந்தா மௌன அஞ்சலி செலுத்தினார்.

கருணைதான் உண்மையில் பலம் என்ற கருத்தை வெளிப்படுத்த ஜெஸிந்தா ஒரு மொழியைக் கண்டுபிடித்திருப்பதாகத்தான் அவரது போக்குகளுக்கு அர்த்தம் கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் கவனித்துக் கொள்வதன் மூலம் மட்டுமே நாம் வலுவான நெகிழ்வான சமூகங்களையும் பொருளாதாரத்தையும் உருவாக்க முடியும்.

நியூஸிலாந்தை ஆளுகை செய்யும் ஜெஸிந்தாவின் நெகிழ்வுத் தன்மை இவ்வாறென்றால் அவரால் ஆளப்பட்ட மக்களும் உருக்கமும் உணர்வும் நெகிழ்ச்சியும் நிறைந்தவர்கள்தான் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன.

5 ஆண்டுகளுக்கு முன்பு காவல்துறையில் சேர்ந்த கான்ஸ்டபிள் மிச்செல் எவன்ஸ், கிறிஸ்ட்சர்ச் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவாக ஹிஜாப் மற்றும் ரோஜாவை அணிந்திருந்தார்.

கிறிஸ்ட்சர்ச் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்கு நடைபெற்ற கல்லறையில் காவலர் ஒருவர் அரை தானியங்கி துப்பாக்கியை பிடித்து ஹிஜாப் அணிந்தபடி இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி இருந்தன.

பச்சாதாபத்தின் விளைவாக உருவான மரியாதை ஒற்றுமையின் சைகையில், நியூசிலாந்தின் பெண்கள் மார்ச் 22ஆம் திகதியை தேசிய ஹிஜாப் தினமாக அறிவித்தனர், நியூசிலாந்து முழுவதும் இஸ்லாமியரால்லாத பெண்கள் இஸ்லாமியரோடு தங்களுக்குள்ள சகோதரத்துவத்தையும் நெகிழ்வுத் தன்மையையும் காட்ட ஹிஜாப் அணிந்தனர்.

இவ்வாறு ஒரு நாட்டை அழகுறப் பரிபாலனம் செய்த ஜெஸிந்தாவை வன்முறைக்கும் வெறுப்புக்கும் எதிராகப் போராடிய ஒரு வீரமங்கை என இனி வரும் வரலாறு வாழ்த்துப்பாடும்.

15 ஆம் பக்க தொடர்ச்சி...

## பொன் விழா காணும்

இப்படி நன்றாகவே போய்க் கொண்டிருந்த பத்திரிகைத்துறை 1977ல் ஆட்சி மாற்றத்தின் பின் பின்னடைவை சந்தித்தது. காரணம் தமிழ்நாட்டு பத்திரிகைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. தடை நீக்கப்பட்டது. மீண்டும் குமுதம், ஆனந்த விகடன், கல்கி போன்ற வார சஞ்சிகைகள் நமது நாட்டில் கோலோச்ச தொடங்கின. இவர்களது சஞ்சிகைகளின் விற்பனை பெரிதாக பாதிக்கப்பட்டது. நாளடைவில் இவர்கள் சஞ்சிகைகள் வெளியிடுவதை நிறுத்தவேண்டி வந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கு செல்வராஜன் அவர்கள் விண்ணப்பித்தார். அந்தக் காலத்தில் இலகுவாக அந்த பதவிகள் கிடைக்க மாட்டாது. அதுவும் கிழக்கு மாகாணத்தில் இருந்து அங்கு செல்வது மிகக் கடினம். தகுதி இருந்தாலும் அரசியல் செல்வாக்கு தேவை. நல்லவேளையாக செல்வராஜன் அவர்களுக்கு அன்று அமைச்சராக இருந்த பொத்துவில் எம்பி அப்துல் மஜீத் அவர்களின் நட்பு இருந்தது.

தகுதியின் அடிப்படையில், அவரின் பரிந்துரையும் கிடைக்க அந்த பதவி கிடைத்தது. இவரின் தாய்வீடான இலங்கை வானொலிக்குள் சென்ற பின்னால் தன்னை ஒரு பல்துறைக் கலைஞனாக ஆக்கிக்கொண்டார். முன்பு பத்திரிகை ஆசிரியராக இருந்த இவர், பின்னர் ஒலிபரப்பாளராக, எழுத்தாளராக, கவிஞராக, பாடலாசிரியராக, பாடகராக, நடிகராக, இசையமைப்பாளராக என்று பல பரிமாணங்களில் தன்னை பரிணமிக்க செய்தார்.

சரி இனி, நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக இவர் 1989 ம் ஆண்டு சுயவிருப்பத்தில் இவர் பதவியிலிருந்து விடுபட்டு, புலம்பெயர்ந்து நோர்வே நாட்டுக்குச் சென்றார். பிறந்த மண்ணும் புகுந்த மண்ணும் எத்தனையோ விசயங்களிலும் விதங்களிலும் வேறுபட்டும் மாறுபட்டும் இருப்பதை உணர்ந்தாரிவர் பழைய கற்பனைகளுக்கும் புதிய அனுபவங்களுக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் இருப்பதை உணர்ந்தார். சமூகப் பிரக்ஜைகளும் புதிய சமூக அக்கறைகளும் இவர் மனசை அலைக்களிப்பதை உணரலானார். முரண்பாட்டு மோதல்களுக்கு மத்தியில் இவர் பேனா உறங்கிக் கிடந்தது.

போலியான மேலோட்டமான வாழ்க்கைக்கும் தமிழர்தம் யதார்த்த தேடலுக்கும் இடையிலான போராட்டங்கள் அவர்களின் எழுத்துக்களில் பிரதானம் பெற்றதை இவர் உணர்ந்தார். இந்த பதிவுகள் புலம்பெயர்ந்த தமிழ் படைப்பாளிகளுக்கு ஓர் இலக்கிய கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் கொடுப்பதாக அறிந்துகொண்டார். இந்த தெளிவுடன் இவர் மீண்டும் எழுதத் தொடங்கினார்.

இவருள் ஏற்பட்டது மீள் பிறப்பு. பல கதைக் களங்களை தெரிவு செய்து சிறுகதைகள் எழுதினார். அவற்றில் ஒன்பது சிறுகதைகளை தெரிவு செய்து "விடியாத இரவுகள்" என்ற தலைப்புக் கொடுத்து சென்னையில் இயங்கிய மித்ர பதிப்பகத்துக்கு அனுப்பினார் . ஒரு தாய் தன் முதல் குழந்தையை பிரசவிக்க எவ்வளவு வலி பொறுப்பாளோ அவ்வளவு வலி இவர் பெற்றிருக்கிறார்.. ஈழத்து எழுத்து பிரமாக்களுள் ஓர்மம்மிக்க படைப்பாளி அமரர் எஸ்பொ அவர்கள். அன்று, அந்த மகா படைப்பாளிதான் இவரின் முதல் நூலை அச்சு வாகனத்தில் ஏற்றினார். கோவிலூர் செல்வராஜனின் முதல் நூல் பிரசவமாகியது. அதற்கு பேராசிரியர் இந்திராபார்த்தசாரதி அவர்கள் அணிந்துரை வழங்கினார். ஐரோப்பாவில் பல நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டது. நல்ல வரவேற்பும் பாராட்டும் பெற்றது.

கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால் விடியாத இரவுகள் நூல் இவரது முதல் நூலாக இருந்தாலும் அது தமிழ்நாட்டு லில்லி தேவசிகாமணி விருதை இவருக்கு பெற்றுக் கொடுத்தது. இந்த விருது பெற்ற முதல் ஈழத்து எழுத்தாளர் என்ற பெருமையையும் இவரது முதல் நூல் இவருக்கு அளித்தது.

இவர், உகந்தை மலை முருகன் கோவிலுக்கு பத்துப் பாடல்கள் கொண்ட இசை அல்பம் ஒன்றை வெளியிட்டார். அதுதான் இலங்கையில் தனிப்பட்ட ஒரு கோவிலுக்காக பாடப்பட்ட முதலாவது பக்திப் பாடல்கள் அல்பம். அந்த இசை அல்பத்தில் திரு.கோவிலூர் செல்வராஜன் அவர்களுடன் மறைந்த இலங்கையின் இசைக் குயில் ராணி ஜோசெப் அவர்களும் எஸ். கணேஸ்வரன் அவர்களும் பாடி இருக்கின்றார்கள். அதன் பின் திரு,கோவிலூர் செல்வராஜனும் அவரது மைத்து=னர் இரா. தெய்வராஜனும் சேர்ந்து திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் பக்திப் பாடல்கள் பாடி வெளியிட்டு இருக்கின்றார்கள்.

திரு.கோவிலூர் செல்வராஜன் அவர்கள் புலம்பெயர்ந்த பின்னர் 1999ம் ஆண்டு "தேசத்தின் தென்றல்" என்ற ஒரு இசை அல்பத்தை ஐரோப்பிய நாடுகளில் வெளியிட்டார். முழுப் பாடல்களையும் கோவிலூர் அவர்களே எழுதி இருந்தார், இவருடன் பின்னணிப் பாடகி பி.எஸ். சசிரேகா அவர்கள் இணைந்து நான்கு பாடல்கள் பாடியுள்ளார். ஐரோப்பிய வானொலிகளும், கனடா, அவுஸ்த்ரேலியா நாடுகளில் உள்ள வானொலிகளிலும் அது அன்று மிக விருப்போடு ஒலித்துக் கொண்டிருந்தது இன்றும் ஒலிக்கின்றன.

இவரது நூல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கின்றன. இங்கு இலங்கையிலும், ஐரோப்பிய நாடுகள், கனடா ஆகிய இடங்களிலும் அவை அறிமுகம் செய்யப்படுகின்றன. வருடத்துக்கு ஒருநூல் இவர் இப்பொழுது வெளியிடுகின்றார். இவரது நூல்களில் நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, மெல்லிசைப் பாடல்கள் என்று பல களங்களை பார்க்க முடிகின்றது. இவருக்கு பல நாடுகள் பல விருதுகளைக் கொடுத்திருக்கின்றன.

### மதிப்பளிப்புகள்

» மென்னிசைக் கவிஞர் -ஜெர்மனி தமிழ் மன்றம் (1994)
» தந்தை செல்வா விருது -உலகத் தமிழ் பேரவை(1996)
» லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது. தமிழ் நாடு (1997)
» வெள்ளிவிழா கலைஞர் விருது நோர்வே தமிழ்மக்கள் இணைவுகூடம் (1999)
» முத்தமிழ் வாருதி - உதயசூரியன் கலாமன்றம்.திருக்கோவில்(2000)
» முத்தமிழ் காவலர் .-லண்டன் தமிழினிவிருது (2008)
» கவிதைக் காவியர் -லண்டன் ஸ்கைடோன்கிறிஸ்தவ இணையம் (2012)
» திருவூர்க் கவிராயர் -கனடா கிழக்கிலங்கை தமிழர் (2013)
» கனடா உதயன் சர்வதேச பல்துறைக் கலைஞர் விருது வழங்கப்பட்டது. (2017)
» வாழ்நாள் சாதனையாளர் விருது அக்கினிக்குஞ்சு அவுஸ்த்ரேலியா (2019)
» வாழ்நாள் சாதனையாளர் விருது சர்வதேச கிராமியக் கலை விருது தமிழ்நாடு (2022)

# டி20 உலகக் கோப்பை:

## இந்தியாவின் முதல் போட்டியே பாகிஸ்தானுடன்



விளையாட்டு

ஐசிசி மகளிர் டி20 உலகக்கோப்பை தொடர் பிப்ரவரி 10ஆம் தேதி தொடங்குகிறது. மகளிர் உலகக் கோப்பையின் 8வது பதிப்பான இத்தொடரை தென்னாப்பிரிக்கா நடத்து கிறது.

மகளிர் டி20 உலகக்கோப்பை தொடர் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. முதல் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்ற நிலையில், 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மகளிர் டி20 உலகக் கோப்பையை இந்தியா நடத்தியது.

2012ஆம் ஆண்டுவரை 8 அணிகள் மட்டுமே பங்கேற்ற நிலையில், 2014இல் அணிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப்பட்டது.

இதுவரை 7 முறை மகளிர் டி20 உலகக் கோப்பை தொடர் நடத்தப்பட்ட நிலையில், 2022ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக நடைபெறவில்லை.

### எந்தப் பிரிவில் எந்த அணிகள் இடம்பெற்றுள்ளன?

10 அணிகளும் தலா 5 அணிகளாக 2 பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன. குரூப் 1 பிரிவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் உள்ளன.

குரூப் 2 பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கு இந்திய தீவுகள், பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

### அணிகளின் தரவரிசை

பெண்கள் டி20 அணிகளைப் பொருத்தவரை 299 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா முதல் இடத்தில் உள்ளது. இங்கிலாந்து 2வது இடத்திலும் நியூசிலாந்து 3வது இடத்திலும் உள்ளன.

இந்திய அணி 267 புள்ளிகளுடன் 4வது இடத்தில் உள்ளது. தென் ஆப்ரிக்கா, மேற்கு இந்திய தீவுகள், பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், அயர்லாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.



கேப்டவுனில் பிப்ரவரி 10ஆம் தேதி நடைபெறும் முதல் ஆட்டத்தில், தொடரை நடத்தும் தென்னாப்பிரிக்காவை இலங்கை அணி எதிர்கொள்கிறது.

லீக் ஆட்டங்களை தொடர்ந்து முதலாவது அரையிறுதி ஆட்டம் பிப்ரவரி 23ஆம் தேதியும் 2வது அரையிறுதி ஆட்டம் பிப்ரவரி 24ஆம் தேதியும் நடைபெறுகிறது. இறுதிப்போட்டி பிப்ரவரி 26ஆம் தேதி நடைபெறவுள்ளது.

### இந்தியா- பாகிஸ்தான் ஆட்டம்

கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் பிப்ரவரி 12ஆம் தேதி கேப் டவுனில் இந்திய நேரப்படி மாலை 6.30 மணிக்கு தொடங்குகிறது.

இந்திய மகளிர் அணி கடைசியாக விளையாடியுள்ள 5 டி20 ஆட்டங்களில் 2 வெற்றிகளையும் 3 தோல்விகளையும் சந்தித்துள்ளது. மறுபுறம், பாகிஸ்தான் அணி தனது கடைசி 5 ஆட்டங்களில் 1 வெற்றியையும் 4 தோல்வியையும் சந்தித்துள்ளது.

### இந்திய அணி ஆட்டக்காரர்கள் விவரம்

ஹர்மன்ப்ரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிருதி மந்தனா, ஷெபாலி வர்மா, யாஸ்திகா பாட்டியா, ரிச்சா கோஷ், ஜெமிமா ரோட்ரிகஸ், ஹர்லீன் தியோல், தீப்தி ஷர்மா, தேவிகா வைத்யா, ராதா யாதவ், ரேணுகா சிங் தாக்கூர், அஞ்சலி சர்வானி, பூஜா வஸ்த்ரகர், ராஜேஸ்வரி கெய்க்வாட் மற்றும் ஷிகா பனிக்வாட்.

மாற்று ஆட்டக்காரர்கள்: மேக்னா, சினே ராணா, மேக்னா சிங்.



இந்தியாவின் ரேணுகா சிங்கை ஆண்டின் சிறந்த வளர்ந்துவரும் வீராங்கனையாக ஐசிசி கடந்த ஜனவரி 25, 2023 அன்று தேர்வு செய்தது. எனினும், தனிப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் பார்த்தால் பந்துவீச்சாளர் பட்டியலில் ரேணுகா சிங் 7வது இடத்தில் உள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனையான தீப்தி ஷர்மா 3வது இடத்தில் உள்ளார். சினே ராணா 9வது இடத்தில் இருக்கிறார்.

பேட்டிங்கை பொறுத்தவரை இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 3வது இடத்திலும் ஷெபாலி வர்மா 8வது இடத்திலும் உள்ளனர். மற்றபடி முதல் பத்து ஆட்டக்காரர்களுக்கான பட்டியலில் 7 வீராங்கனைகளுடன் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

ஆல்ரவுண்டர் பட்டியலில் இந்தியாவின் தீப்தி ஷர்மா 2வது இடத்தில் உள்ளார்.

### ஆதிக்கம் செலுத்தும் ஆஸ்திரேலியா

மகளிர் டி20 உலகக் கோப்பை போட்டிகளை பொறுத்துவரை ஆஸ்திரேலியாவின் கையே ஓங்கியுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள 7 தொடர்களில் 5 முறை ஆஸ்திரேலிய அணி கோப்பையை வென்றுள்ளது. 1 முறை 2வது இடத்தை பிடித்துள்ளது.



அதேபோல், மகளிர் உலகக் கோப்பையின் 7 தொடர்களிலுமே அந்த அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

அடுத்ததாக, இங்கிலாந்து மற்றும் மேற்கு இந்திய தீவுகள் அணி தலா ஒருமுறை உலகக் கோப்பையை வென்றுள்ளன. இந்தியாவை பொருத்தவரை கடந்த 2020இல் நடைபெற்ற மகளிர் உலகக் கோப்பை தொடரில் 2வது இடத்தை பிடித்ததே சிறந்த நிலையாக உள்ளது.

*BBC Tamil*